விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 239 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 30 வெள்ளிக்கிழமை (15.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


# செம்மணியில் மேலும்
# பல மனிதப் புதைகுழிகள்

## யாழ்.நீதவான் நீதிமன்றில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

- அகழ்வுக்கு மேலும் 8 வாரங்கள் தேவை எனக் கோரிக்கை.
- அகழ்வுக்குத் தேவையான பாதீட்டை தயாரிக்குமாறு நீதிமன்றம் கட்டளை.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது செம்மணிப் பகுதியில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்பதற்கான சான்றுகள் காணப்படுவதால், மேலும் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள 08 வார

02ஆம் பக்கம் பார்க்க

## ஸ்கான் அறிக்கை மன்றில் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியின் ஸ்கான் அறிக்கை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழி வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்

02ஆம் பக்கம் பார்க்க

## எதிர்வரும் 22ஆம் திகதி செம்மணி அகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகும் என யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கு

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி வழக்குடன் தொடர்புடைய இராணுவத்தினர் வெளிநாடுகளுக்கு தப்பிக்கலாம்

### நீதிமன்றில் சுமந்திரன் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

செம்மணி வழக்கில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லக்கூடிய ஏது நிலைகள் காணப்படுவதாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

செம்மணிப் புதைகுழி வழக்கு நேற்று வியாழக்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான்

15ஆம் பக்கம் பார்க்க

## செஞ்சோலை படுகொலையின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல்



11ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன்துறையை சேர்ந்த இருவர் தமிழகத்தில் கைது

(சென்னை)

யாழ்பாணம் காங்கேசன் துறையைச் சேர்ந்த இரு இளைஞர்கள் தமிழகத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் பயணித்த பைபர் படகு பழுதடைந்தமையால், தமிழகத்தின்

15ஆம் பக்கம் பார்க்க

## நல்லூரில் வீதித் தடை யாழ்.மாநகர சபையில் கடும் விவாதம்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் ஏற்படுத்தப்பட்டுள்ள வீதித் தடை தொடர்பாக யாழ்.மாநகர சபையில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

யாழ்.மாநகர சபையின் அமர்வு நேற்று வியாழக்கிழமை முதல்வர் விவேகானந்தராஜா மதிவதனி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நடைபெற்று வரும் நல்லூர் மஹோற்சவத்தின்போது ஏற்படுத்தப்பட்டுள்ள வீதித்தடை தொடர்பாக கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

குறிப்பாக நல்லூர் ஆலய பின்பக்க பருத்தித்துறை வீதி முழுமையாக தகரம் இட்டு அடைக்கப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் கடும் சிரமங்களை எதிர்

02ஆம் பக்கம் பார்க்க

## அதிசொகுசு கப்பல் இன்று யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து அதிசொகுசு சுற்றுலாப் பயணிகள் கப்பலானது இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக காங்கேசன் துறை

15ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பு - தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தின் ஒரு பகுதி காணியை விடுவிக்க இணக்கம்

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு, வவுணதீவு - தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம் உள்ள காணியின் ஒருபகுதியை விடுவிப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்

15ஆம் பக்கம் பார்க்க

## விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் நாட்டில் புழக்கத்தில் காணப்படுகின்றது

### புதிய பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் நாட்டில் புழக்கத்தில் இருப்பதாக பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமையகத்தில் பொலிஸ்மா அதிபராக பதவியேற்றுக் கொண்ட அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் விற்பனைக்கு

யாழ்.KKS வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில், KKS வீதி முகப்புடன் 150 அடி நீளமும் 150 அடி அகலமும் கொண்ட காணித் துண்டு விற்பனைக்குண்டு.

இதனை 15 X 15 ஆக பிரித்தும் விற்கப்படும்.

தொடர்பு (C-3653)

**077 723 2535**


## Invitation For Bids (IFB) - 2025

### KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

1. The Chairman, Divisional Procurement Committee (Div PC) on behalf of the Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Construction** for grade mentioned in the table below with the construction Industry Development Authority (CIDA )
4. Qualification requirements are indicated in section -5 ( Schedule) of the Bidding document.
5. Interested bidders may obtain further information from **The Chairman, Procurement Committee, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi (T.P No : 0212285761, Fax No : 0212285690, E-Mail: kilinochchi1kps@gmail.com)** and inspect the bidding documents at the address given below **from 15.08.2025 until 28.08.2025 During 9.00 am to 3.00 pm** on Normal Working Days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **The Chairman, Procurement Committee, karachchi Pradeshiya Sabha,A9 Road, Kilinochchi,** from **15.08.2025 until 28.08.2025 from 9.00 am to 3.00 pm.** Upon payment of a non-refundable fee as mentioned in the below table. The method of payment will be **by cash.**
7. Bids shall be delivered in duplicate to the address to **The Chairman, Procurement Committee** (Div PC) **Karachchi Pradeshiya sabha, A9 Road, Kilinochchi** on or before **10.00 am** on **29th August 2025** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. All bids shall be accompanied by a "Bid-Security, as in the table below.
9. The pre-bid meeting will be held on **22.08.2025** at **03.00 pm** at the **Karachchi Pradeshiya Sabha,A9 Road, Kilinochchi.**

Table

| | |
|---|---|
| Document Issuing/ Purchasing Period | **From 2025.08.15 – 2025.08.29** |
| Pre – Bid Conference | **At 03.00 Pm on 2025.08.22** |
| Closing and Opening of Bid | **At 10.00 Am on 2025.08.29** |

| S.No | BID No. | Name of the Work | Source of Funds | Estimated Cost (With Out VAT) (Rs.Mn) | Required Bid Security | | ICTAD Grade Required (Highways,Buildings) | Bid Shall be Valid up to | Contract period | Non Refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount (Rs.) | Valid up to | | | | |
| 1 | NP/KN/KPS/2025/ PSDG-05 | CONSTRUCTION OF BOX CULVERT UMAIYALPURAM DUMPING GROUND ROAD – STAGE II | PSDG | 2.161 | 34,000.00 | 14.11.2025 | C9 or Above (Highways) | 17.10.2025 | 84 Days | 2,000.00 |
| 2 | NP/KN/KPS/2025/ PU-02/ C.W 30 | CONSTRUCTION OF URUTHIRAPURAM HOSPITAL AND CEMETERY JOINT ROAD | Council | 4.239 | 64,000.00 | 14.11.2025 | C8 or Above (Highways) | 17.10.2025 | 90 Days | 2,000.00 |
| 3 | NP/KN/KPS/2025/ PU-02/ C.W 31 | IMPROVEMENT OF URUTHIRAPURAM WEST 1ST CROSS ROAD. | Council | 2.118 | 32,000.00 | 14.11.2025 | C9 or Above (Highways) | 17.10.2025 | 90 Days | 2,000.00 |
| 4 | NP/KN/KPS/2025/ PU-02/ C.W 32 | RE-CONSTRUCTION OF RATHTHINAPURAM 3RD CROSS ROAD. | Council | 3.193 | 48,000.00 | 14.11.2025 | C9 or Above (Highways) | 17.10.2025 | 90 Days | 2,000.00 |
| 5 | NP/KN/KPS/2025/ PU-02/ C.W 33 | CONSTRUCTION OF URUTHIRAPURAM EAST 1ST CROSS ROAD. | Council | 3.782 | 57,000.00 | 14.11.2025 | C9 or Above (Highways) | 17.10.2025 | 90 Days | 2,000.00 |
| 6 | NP/KN/KPS/2025/ PU-02/ C.W 34 | CONSTRUCTION OF POWER STATION ROAD BOX CULVERT | Council | 3.474 | 53,000.00 | 14.11.2025 | C9 or Above (Highways) | 17.10.2025 | 90 Days | 2,000.00 |

The address referred to above is (are):

Chairman,
Divisional Procurement Committee (Div PC)
Karachchi Pradesiya Sabha.

(C-3650) **15.08.2025**

# யாழ்.பல்கலைக் கழகத்தில் செஞ்சோலை நினைவேந்தல்



செஞ்சோலைப் படுகொலையின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் அமைந்துள்ள சுற்றுவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது கொல்லப்பட்டவர்களின் உருவப் படங்களுக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியில் இருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி விமானப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் 54 மாணவிகளும் 7 பணியாளர்களுமாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டும் 150 இற்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

# மாகாண சபைத் தேர்தல் முழுமையான ஒத்துழைப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழு

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றமை வரவேற்கத்தக்கது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபைத் தேர்தல் விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாமும் உறுதியாகவுள்ளோம்.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான தேர்தல் உரிமையைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு.

நீதியானதும், சுதந்திரமானதுமான வகையில் தேர்தலை நடத்துவதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் தேர்தலை சிறந்த முறையில் நடத்துவோம்.

கடந்த 09 மாத காலத்துக்குள் மூன்று தேர்தல்களைச் சிறந்த முறையில் நடத்தினோம் என்றார். (ம-7)

## ஸ்கான் ...

தில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மண் பகுப்பாய்வு மற்றும் ஸ்கான் ஆய்வு அறிக்கைகள், சட்ட மருத்துவ அதிகாரியால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்தநிலையில் பழைய செம்மணிப் புதைகுழி வழக்கையும், சித்துப்பாத்தி வழக்கையும் ஒன்றிணைத்து விசாரணை செய்ய வேண்டும் என நீதிமன்றத்தில் நேற்றுக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எழுத்து மூல சமர்ப்பணத்தைச் சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-7,33)

## செம்மணியில்...

காலப்பகுதி தேவைப்படுவதாக மன்றில் கோரிக்கை முன் வைக்கப்பட்டதை அடுத்து அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள மன்று கட்டளையிட்டுள்ளது.

மேலும் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள அதேவேளை கடந்த 06ஆம் திகதி வரையில் 32 நாட்கள் முன்னெடுக்ககப்பட்ட போதும் தற்போது பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் அவற்றின் மூன்றாம் பகுதிப் பணிகள் எதிர்வரும் 22ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் 20ஆம் திகதி மேலும் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ள பகுதிகளில் துப்பரவுப் பணிகள் மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதன் போது செம்மணியில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருப்பதற்கான சான்றுகள் காணப்படுவதால் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ள காலத்திற்கு மேலதிகமாக மேலும் 08 வார காலப்பகுதி தேவைப்படுவதாக மன்றில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அதற்கான பாதீடுகளைத் தயாரித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மன்று கட்டளையிட்டது.

அதேவேளை கடந்த 06ஆம் திகதி வரையில் கட்டம் கட்டமாக 41 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப்பணிகளின் போது 133 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் 147 எலும்புக் கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-7,33)

## நல்லூரில்...

நோக்குகின்றனர்.

அவ்வீதியைத் திறந்துவிடுமாறு உறுப்பினர்கள் கோரிக்கை முன் வைத்தனர்.

கடந்த முறை நடைபெற்ற விசேட யாழ்.மாநகர சபை அமர்விலும் வீதித் தடையை அகற்றுவது தொடர்பிலும் கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கப்படும் என்று யாழ்.மாநகர சபை முதல்வரால் உத்தரவாதம் வழங்கப்பட்டது. ஏன் வீதித் தடை அகற்றப்படவில்லை எனச் சபை உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

மக்கள் பாதுகாப்புக்காகவே வீதித் தடை போடப்பட்டுள்ளதாக முதல்வர் தெரிவித்ததையடுத்து அங்கு குழப்ப நிலை உருவாகியிருந்தது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செம்மணி புதைகுழி விவகாரம்;

# விசாரணைகளின் பின் தீர்வு!

## ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் கருத்திற்கு பாதுகாப்பு அமைச்சர் பதில்



(கொழும்பு)

**செம்மணியில் கிடைக்கும் மனித என்புக்கூடுகள் எந்தக் காலத்திற்கு உரியது என்பதைக் கண்டறிய வேண்டும். அதன்பின்னர் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை குறித்து பதிலளித்த போது, மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இதனைத் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தின் கீழ் சர்வதேச விசாரணைக்கான தேவை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அதற்கான தேவை ஏற்படவில்லை.

அத்துடன், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் எந்தவொரு மனித உரிமை மீறலும் இடம்பெறவில்லை என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால சுட்டிக்காட்டினார்.

எனவே, செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜெனீவா கூட்டத் தொடரில் அரசாங்கத்தின் தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கவுள்ளதாகவும், யுத்த காலத்தில் ஏதேனும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருந்தால், உள்ளக விசாரணையின் மூலம் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தற்போதைய அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், செம்மணி விவகாரத்தையும் தற்போதைய அரசாங்கம் மூடி மறைக்கவில்லை. செம்மணி மனிதப் புதைகுழி, விடுதலைப் புலிகளின் கீழும் இராணுவத்தின் கீழும் இருந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, செம்மணியில் கிடைக்கும் மனித என்புக்கூடுகள் எந்தக் காலத்திற்கு உரியது என்பதைக் கண்டறிய வேண்டும். அதன்பின்னர் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், இவற்றுக்கு உடனடியாகத் தீர்வுகளை வழங்க முடியாது என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டார். (நி)

# 14 ஆயிரம் சிறுவர்கள் பாதுகாப்பற்ற நிலையில்

## பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

நாட்டில் 14,000 சிறுவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 700 சிறுவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் நேற்று நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பெற்றோர் மரணித்தல், வெளிநாட்டுக்கு செல்லல் அல்லது போதைக்கு அடிமையாதல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் குறித்த சிறுவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் நாடளாவிய ரீதியில் 14,000 சிறுவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 2,000 பேர் வரையான சிறுவர்கள் மேல் மாகாணத்தில் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், குறித்த சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் எதிர்காலம் கருதி விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)


# சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டில் கௌரவம் பெறும் தமிழ் அறிஞர்கள்



பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா



பேராசிரியர். துரை. மனோகரன்



பேராசிரியர். ம.இரகுநாதன்



ச. விநாயகமூர்த்தி



க. சட்டநாதன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு இன்று வெள்ளிக்கிழமை தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் தலைமையில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இவ் ஆய்வு மாநாட்டில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் துரை. மனோகரன், பேராசிரியர் ம.ரகுநாதன், திரு.ச.விநாயகமூர்த்தி, மூத்த படைப்பாளர் திரு க. சட்டநாதன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (நி)

# கொத்து ரொட்டி, முட்டை அப்பம் விலைகள் சடுதியாக அதிகரிப்பு

(கொழும்பு)

கொத்து ரொட்டி, முட்டை அப்பம் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

முட்டை மற்றும் பிற மூலப்பொருட்களின் விலை குறைந்திருந்தாலும், கொத்து ரொட்டி, முட்டை அப்பம் மற்றும் முட்டை சார்ந்து உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலைகளும் மிகவும் அதிகமாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

அதன்படி ஒரு முட்டையின் விலை 29 ரூபா முதல் 33 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இந்த நிலையில், பல்வேறு உணவகங்களில் கொத்து ரொட்டியின் விலை மிக அதிகமாக இருப்பதாகவும், முட்டை அப்பம் மற்றும் முட்டை ரொட்டியின் விலை சமமாகவும் அதிகமாகவும் இருப்பதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே உடனடியாக நுகர்வோர் அதிகார சபை இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து மக்களுக்கு சலுகைத் திட்டங்களை வகுக்க வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

# இலங்கை பொலிஸ் கலாசார பிரிவின் பதில் பணிப்பாளர் சதீஸ் கமகே கைது

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் கலாசார பிரிவின் பதில் பணிப்பாளர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஸ் கமகே இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் அதிகாரிகளால் நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே விசாரணை நிமித்தம் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விசாரணையின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஐ.சி.சி தரவரிசைப் பட்டியலில் ஆதிக்கம் செலுத்தும் இலங்கை



ஆண்களுக்கான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் தரவரிசைப் பட்டியலில், இலங்கை அணி 103 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

2025 ஒகஸ்ட் 10 அன்று வெளியிடப்பட்ட குறித்த தரவரிசைப்பட்டியலில் இந்திய அணி 124 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளதுடன், 109 புள்ளிகளுடன் நியூசிலாந்து அணி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

அத்துடன், அவுஸ்திரேலிய அணி மூன்றாவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பாகிஸ்தான் அணி ஐந்தாவது இடத்தில் உள்ள நிலையில் தென்னாபிரிக்கா (6), ஆப்கானிஸ்தான்(7), இங்கிலாந்து (8), மேற்கிந்தியத் தீவுகள் (9) மற்றும் பங்களாதேஷ் (10) ஆகிய அணிகள் புள்ளிப்பட்டியலில் அடுத்தடுத்த இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## 34 வருட கனவை நனவாக்கியது மேற்கிந்திய தீவுகள் அணி




பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் பாகிஸ்தானும், 2ஆவது போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியும் வெற்றி பெற்ற நிலையில் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3 ஆவது மற்றும் கடைசிப் போட்டி திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த ஆட்டத்திற்கான நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. தொடர்ந்து முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவு அணி 50 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 294 ஓட்டங்கள் எடுத்தது.

தொடர்ந்து 295 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பாகிஸ்தான் வீரர்கள், மேற்கிந்திய தீவுகள் அணியின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தனர். இறுதியில் பாகிஸ்தான் அணி 24.2 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி தரப்பில் அதிகபட்சமாக ஜெய்டன் சீல்ஸ் 6 விக்கெட் வீழ்த்தினார். இதன் மூலம் 202 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை 34 ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கிந்திய தீவுகள் அணி கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (3)



தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் பெண்களுக்கான கபடிப் போட்டி இளவாலை Dr.மோகன் ஞாபகார்த்த உள்ளக அரங்கில் அண்மையில் நடைபெற்றது.
இதன் இறுதிப் போட்டியில் வயாவிளான் ஜீவஒளி இளைஞர் கழக அணியை எதிர்த்து போட்டியிட்ட கரகம்பனை இந்து இளைஞர் கழக அணி முறையே 23.45 என்ற கணக்கில் வெற்றி வாகை சூடியது.



சுவிட்சர்லாந்தில் அண்மையில் நடைபெற்ற ஐரோப்பிய ரீதியிலான தாச்சி விளையாட்டுப் போட்டியில் கைதடி குமரநகர் சிவப்பு மற்றும் குமரநகர் மஞ்சள் விளையாட்டு அணியினர் இரண்டு தனி அணிகளாக களமிறங்கிய நிலையில் குமரநகர் சிவப்பு அணி வெற்றி வாகை சூடியுள்ளது.

இதில், குமரநகர் சிவப்பு அணி தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றி பெற்று "சூழல் கிண்ணத்தை" தம்வசப்படுத்தியது. குமரநகர் மஞ் சள் அணி சிறப்பாக விளையாடி மூன்றாம் இடத்தைப் பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டாவது ரி-20 போட்டியில் தென்னாபிரிக்கா அபார வெற்றி



அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையே டார்வின் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது ரி-20 போட்டியில், தென்னாபிரிக்கா அணி 53 ஓட்டங்களால் அபார வெற்றியை பெற்றது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்க அணி சார்பாக துடுப்பெடுத்தாடிய டிவால்ட் பிரெவிஸ் 56 பந்துகளில் துடுப்பெடுத்தாடி 125 ஓட்டங்களைப் பெற்றார்.

பின்னர், 219 என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 17.4 ஓவர்களில் 165 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக டிம் டேவிட் 50 ஓட்டங்களையும் எலெக்ஸ் கெரி 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

தென்னாபிரிக்க அணியின் இந்த வெற்றியின் ஊடாக 3 போட்டிகளைக் கொண்ட ரி-20 தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகம், வடமாகாண சபை, யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்தும் இதயபூர்வமாக யாழ்ப்பாணத்திற்கு - விசேட நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (8-60-33)


**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

தொடர்புகளுக்கு

077 839 3974, 076 889 1308

(1430)


# ‘வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயே...’ என்று நல்லைக் கந்தப் பெருமானை திருப்புகழால் பாடிய.... அருணகிரிநாதருக்கு இன்று நல்லையில் உற்சவம்

முத்தமிழ்க் கடவுளாகிய திரு முருகன் ஒருவனையே பாடுகின்ற பணியை தலை மேற்கொண்டு பரமபதிவிரத நிலை இதுவே என உலகுக்குணர்த்திய பரமகுரு நாதரே அருணகிரிநாதராவார் முருகப்பெருமானே இவரை நாதா... என்று அழைக்க இவர் நாதப்பிரம்மமாய் நின்று தன் சித்தத்தில் சிவகுரு நாதனை சிந்தித்து சந்த மொடு சொற்சுவை நிரம்பிய பல்லாயிரம் பாடல்களை பாடியருளினார்.

இவ் வண்ணம் பக்திச்சுவை நனிசொட்டச்சொட்டப் பாடிய திருப்புகழ், திருவகுப்பு, கந்தரநுபூதி, கந்தரலங்காரம், வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், கந்தரந்தாதி ஆகிய எல்லாப் பாடல்களிலும் தமிழும், பக்தியும் இரண்டறக் கலந்து மடைதிறந்த வெள்ளம் போலப் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. இவற்றுள்ளே திருப்புகழானது பக்திச்சுவையும் சொல்லமைவும், சந்தவோசையும் மிக்க பாடல்களாகும்.

இத் தகு திருவருட் திறத்தோடு பாடப்பெற்ற திருப்புகழிலே- “பூத்தார் சூடுங் கொத்தவர் குழவியர்.... எனத் தொடங்கும் பாடலிலே” யாழ்பாணாயன் பட்டினமருவிய பெருமானே... என்று நல்லைக் கந்தப் பெருமானை விழித்திருப்பதானது நல்லைக் கந்தப்பெருமானுடன் இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் பெருமை பகர்கின்ற திருவாக்காக அமைகின்றது. மேலும் அப் பெருமானாரின் வித்துவத் திறத்தை “யாப்பாராயுஞ் சொற்றமிழருள் தரு முருகோனே...” என்று பாடியிருப்பது முருகப்பெருமானின் அருட் பிரவாகத்தினால் எம் முன்னோர்கள் பெற்றுய்த்த தமிழ்ப் புலமையையும் எடுத்தியம்புவதாக அமைந்து விளங்குகிறது.

இவ் விதம் நல்லைக் கந்தனைப் பாடிய அருணகிரிநாதர் அத் திருப்புகழின் கருத்தியலுக்கு அணி சேர்ப்பதாக பாடலின் நடுக் கூற்றிலே “வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயே...” என்று வேண்டுகிறார்.

ஞானமென்பது உள்நின்றுணர்த்தும் இயல்பில் மட்டுமன்றி வெளிப்படுத்தும் வார்த்தைகளிலும் செறிந்திருக்க வேண்டுமென்கிறார்.

வெறுமனே அமைந்த அறிவு என்பதை உயரிய வழியில் கொண்டு செல்ல ஞானச் செறிவு வேண்டுமென்கிறார். அந்த ஞானம் என்பது எமது வருங்காலத்தை சீரிய முறையில் அமைத்துக் கொள்ள ஏதுவாகவிருக்கும் என்பதுடன் சமகால வாழ்வியல் முறைகளையும் சீர்மைப்படுத்துவதாக அமையும்.

ஆதலினால் எமது மண்ணில் நாம் வாழ்ந்து பெற்ற பட்டறிவின் பிரகாரம் நாம் உய்வதற்கான கடைசி வழியாக அமைந்திருப்பது ஆன்மீக மார்க்கம் ஒன்றேயாகும். தொடரும் இடர்கள் துன்பியல் நிகழ்வுகள் யாவற்றையும் நீக்க வல்லதாக அமைவது இறை நம்பிக்கையுடன் இரண்டறக் கலந்து வாழ்தல் என்பதே ஆகும். எமது மக்களின் நிம்மதிக்கும், விடிவுக்கும் “வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட” என்று நல்லைக் கந்தப் பெருமானிடத்து அருளயே சரணடைந்து வாழ்வோமாக.



**கலாநிதி**
**துரை.கணேசமூர்த்தி.**


# இராசிபலன்


15.08.2025
ஆடி 30, வெள்ளிக்கிழமை
சப்தமி பின்னிரவு 1.44 மணி வரை


அச்சுவினி முற்பகல் 10.12 மணிவரை
சுப நேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35 -12.05 மணிவரை


சந்திராஷ்டமம்
அத்தம், சித்திரை.


**வளவன்**



**மேஷம்** சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வேலைச் சுமை கூடும், வழிபாட்டால் சிறப்பினைக் காணும் நாள்.



**கடகம்** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், நண்பர்கள் வழியில் நன்மையுண்டு, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், போசன சுகமுண்டு.



**துலாம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


**மகரம்** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.


**ரிஷபம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.


**சிம்மம்** வியாபார விருத்தியுண்டு, சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.


**விருச்சிகம்** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், கௌரவமான நாள்.


**கும்பம்** தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, போசன சுகமுண்டு.


**மிதுனம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும்.


**கன்னி** கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், தொழிலில் அதிகாரிகளை விமர்சிப்பதைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.


**தனுசு** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.


**மீனம்** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

**இரகசியமாகச் செய்த பாவம் சாகும் வரை குத்தும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு கைப்பிடி அரிசி தாருங்கள்...



அம்பாள் அடியார்களே... எதிர் வரும் 25.08. 2025 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றுதுடன் எங்கள் அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகின்றது. ஆன்மிகத்திற்கும் சமயப் பணிகளுக்கும் அல்லா மல் வேறு எந்த ஆடம்பர நிகழ்வுகளுக்கும் எங்கள் தேவஸ்தானம் இடம் கொடுப்பதில்லை.

நீங்கள் அனைவரும் அறிந்ததைப் போலவே அடையாவாசலாக உள்ள எங்கள் தேவஸ்தானத்தில் உள்ள அன்னசத்திரத்தில் மகோற்சவ காலத்தில் அடியார்கள் அனைவருக்கும் அன்னதானம் வழக்கப்படுவது வழமையான ஒன்றாகும். இந்த ஆண்டும் மகோற்சவ காலத்தில் அடியார்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படுவதற்குரிய சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எங்கள் தேவஸ்தானத்தில் பாத்திரம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது . நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் வீடுகளில் இருந்து ஒரு கைப்பிடி அரிசி கொண்டு வந்து இந்தப் பாத்திரத்தில் போட்டு அடியார்களுக்கு உணவு கொடுக்கும் புண்ணிய கருமத்திற்கு உதவிடுமாறு அன்பாக வேண்டி நிற்கின்றேன். நீங்கள் தருகின்ற அரிசியை அன்னமாக்கி அடியார்களுக்கு உணவு கொடுக்கும் பெரும்புண்ணிய கருமத்தை எங்கள் தேவஸ்தானம் வருகின்ற மகோற்சவ காலத்தில் சிறப்பாக மேற்கொள்ளவுள்ளது.

இந்த மிக உயர்ந்த புண்ணிய கருமத்தில் நீங்களும் பங்கெடுத்து ஒரு கைப்பிடி அரிசியை உங்கள் வீடுகளில் இருந்து எடுத்து வந்து இந்தப் பாத்திரத்தில் போட்டு அடியார்களுக்கு உணவு கொடுக்கும் புண்ணிய கருமத்தில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு அன்பாக வேண்டி நிற்கின்றேன்.

அறுகம்புல் , எருக்கம்பூ, வில்வ இலை, துளசி இலை அல்லது ஏதாவது பச்சிலை அல்லது தண்ணீர் இவைகளை கடவுளுக்கு அளித்தால் போதும். பெரிய புண்ணியம் கிடைக்கும் என நமது சமயம் நமக்கு சொல்லித் தந்துள்ளது.

**யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவிற்கு**
**ஒரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும்போது**
**ஒரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு**
**ஒரு இன்னுரை தானே**

என்ற திருமந்திரப் பாடல் பிற உயிர்களுக்கு உணவு கொடுப்பதில் உள்ள தர்மத்தின் சிறப்புகள் பற்றி நமக்கு தெளிவாக சொல்கிறது. பசுவுக்கு ஒரு கைப்பிடி புல் கொடுப்பதும், நாம் உண்ணும் போது உண்கிற உணவில் ஒரு கைப்பிடி எடுத்து பசித் தோருக்கு கொடுப்பதும் பெரிய புண்ணியமான கருமம் ஆகும்.

**பசியினால் இளைத்தே**
**வீடுதோ றறிந்தும்**
**பசியறா தயர்ந்த**
**வெற்றரைக் கண்டுளம்**
**பதைத்தேன்!**

என்பது, இராமலிங்க அடிகளால் (வள்ளலார்) பாடப்பட்ட ஒரு திருவருட்பா பாடல் வரிகள் ஆகும். "வாடிய பயிர்களைப் பார்த்த போதெல்லாம், நானும் வாடினேன்" என்று பாடிய வள்ளலார், பசி, பிணி, வறுமையால் வாடும் உயிர்களைக் கண்டபோது தானும் வாடி வேதனை அடைந்தேன் என்கிறார்.

இவை அனைத்தும் உணவு கொடுப்பதில் உள்ள சிறப்புக்களையும் பெருமைகளையும் நமக்கு தெளிவாகச் சொல்கிறது. எனவே அம்பாள் அடியார்களே எங்கள் தேவஸ்தானத்தில் வைக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் உங்கள் வீடுகளில் இருந்து ஒரு கைப்பிடி அரிசியைக் கொண்டு வந்து போட்டு தர்ம காரியம் செய்யுங்கள்.

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.**

எங்களிடம் உள்ள உணவையும் பலரோடும் பங்கிட்டுத்தான் உண்ணும் இயல்பினை மேற்கொள்ளுதல், அறநூலோர் தொகுத்துக் கூறிய அறங்களுள் எல்லாம் மிகச் சிறந்தது என்பது வள்ளுவர் வாக்கின் பொருள் ஆகும்.

எனவே அம்பாள் அடியார்களே... அடியார்களுக்கு உணவு கொடுக்கும் புண்ணிய கருமத்தில் நீங்களும் பங்கெடுத்துக் கொள்ளுங்கள்...

அனைத்து ஆலயங்களிலும் பிடி அரிசி சேகரிக்கும் பண்பாட்டை மேற்கொள்வது சாலச்சிறந்த புண்ணியமாகும்.

**செஞ்சொற்செல்வர்,**
**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**தலைவர்,**
**துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து நடத்தும் "தெய்வீக இசையரங்கு" இன்று வெள்ளிக் கிழமை மாலை 6.45 மணி தொடக்கம் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதலாவது இசையரங்கில் பாட்டு - செல்வன் ரமணசர்மா லயசர்மா, செல்வன் சூரியகுமார் இசைவாணன், வயலின் - திருமதி வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம் - வரதராஜசர்மா ரமணசர்மா, கெஞ்சிரா - செல்வன் உ. பக்தவர்சலசர்மா, மோசிங் - செல்வன் ரமண சர்மா கானா மிருதசர்மா, கடம் - செல்வன். உதயகுமார் ஹிதுசன்

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இரண்டாவது இசையரங்கில் பாட்டு - வைத்தியகலாநிதி சாயி லக்ஷமி லோகீஸ்வரன், வயலின் - இராசரத்தினம் நிரோசன், மிருதங்கம் - மகேந்திரன் லோகேந்திரன், கடம் - செல்வன் சிவகுமார் மாதுளன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (8)

# ஸ்ரீ பரஞ்சோதி பகவதி அம்மாவின் ஜென்மதின வைபவம்



(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ பரஞ்சோதி பகவதி அம்மாவின் ஜென்ம தின வைபவம் ஸ்ரீ பரஞ்சோதி பகவதி பத்மாவதிதேவி யாக பூமியில் அவதரித்த திருநாள் ஆவணிமாதம் 15 ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஆகும். இத் திரு நாளில் பக்தர்கள் தாங்கள் அனுபவித்த அருளுக்கும் அற்புதத்திற்கும் நன்றி செலுத்தும் நோக்கமாக விசேட சிறப்பு பாதுகாபிஷேகம் மற்றும் சிறப்பு சர்வ ஐஸ்வரிய கலச பூசையும் இன்று வெள்ளக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல 116/1A முகந்தரம், நாராயணார் வீதி, சுன்னாகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இடம் பெறவுள்ளது (அத்துடன் இராப்போசனமும் வழங்கப்படும்) என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். தொடர்புகளுக்கு 077 392 1423, 071 217 7697, 077 364 7436 (8)




## கா! நல்லைக் குமரேசனே!

திசைமாறிப் போனதிரு வருணகிரி தரமுயர
திருநாவில் வேலெடுத்து
இசைவூற எழுதவே யிங்குதிருப் புகழினை
எழிற்சந்தம் இலங்கிமிளிர
அசையாத செந்தமிழின் ஆற்றலினை யேற்றியே
அவனிபுகழ்ந் தாற்றவெழுந்தாய்
இசையுந்தமி ழிசையும்படி யிசைந்தகலைக் காவலா!
எம்நல்லைக் குமரேசனே!

**கலாபூஷணம்,**
**சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.**

## திருவருள் புரிவாய்!

உனைநாடி அர்ச்சனை புரிய
ஒரு ரூபா இருந்தாலே போதும்
தினைமாவும் தேனோடு நெய்யும்
திருவிளக் கிட்டுமே நின்றோம்
வினையாவும் விலக்கின்ற வேலா
வேடங்கள் பலகொண்டு வருவாய்
உனைக்காண ஓடோடி வந்தோம்
உளமாறத் திருவருள் புரிவாய்!

**கலைவாரிதி - நயினை இராகுலன்**

## பல்லோரும் பரவி ஏற்றும் நல்லூர் ஆலயம்

அனுதினம் நேரம் தவறா - ஆலயம்
அபயம் என வரும் - அடியவர்கள்
அல்லல் அழிக்கும் - ஆறுமுகன் ஆலயம்
நல்லைவாழ் நம்மனோர்க்கும் நாளும்
மருந்தாகும் மலைமகள் மைந்தன் ஆலயம்
பல்லோரும் பரவி ஏற்றும் நல்லூர் எனும் ஆலயம்

**திருமறைச்செல்வர் பாலசுப்பிரமணியம்,**
**வேலணை**

## நம்புறோம் நல்லூரானே

நல்லூரின் பிம்பமே
நாவழைக்கும் கந்தனே
நானிலம் போற்றியே
நாடிவரும் உன்னையே

அமாவாசை முன்நாளில்
அமர்ந்து தேரில்வர
அத்தனை கண்களும்
ஆனந்த பரவசமாய்

இருப்போரும் இல்லாரும்
இரந்து வரங் கேட்பர்
இணையேதும் இல்லாதான்
இரங்கி வந்தருள

**விநாயகர் சாந்தை மு.ரமேஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வளக் கண்காட்சி நல்லூரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினது பல்துறைகளின் ஈடுபாட்டுடன் கடந்த ஐந்து ஆண்டுகளாக நிகழ்ந்துவரும் வடமாகாண நீர்வளம் பேணுதற்கான பேராய்வு செயற் றிட்டத்தின் இரண்டாவது சிறப்புக் கண்காட்சி இன்று நல்லூர் ஆலயத்தை நெருங்கிய பகுதியில் (பாரதியார் சிலைக்கு அருகிலுள்ள நெசவுப் பயிற்சிக்கூட வளாகத்தில்) ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இன்று முதல் இறுதி பத்து நாட்கள் திருவிழாவின் போதும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்திருக்கும் இக் கண்காட்சிக் கூடத்தில் பல்வேறு ஆய்வு பெறுபேறுகளை உள்ளடக்கும் சீரமைக்கப்பட்ட காட்சிப் பொருட்கள், செயலமர்வுகள், கலை ஆற்றுகைகளும் நிகழவிருக்கின்றன.

பள்ளி மாணவர்களுக்கெனப் போட்டி நிகழ்ச்சிகளும் இதையொட்டிய ஓவியப் போட்டியொன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மத்திய, மாகாண அரச நீர்த்துறை சார்ந்த அதிகாரிகளும், ஆளுநர் உள்ளடங்கிய உயரதிகாரிகளும் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவிருக்கும் தொடக்க விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர். (8)

# சுன்னாகத்தில் களவாடப்பட்ட நகைகளுடன் ஊர்காவற்றுறையில் ஒருவர் கைது

(அராலி)



சுன்னாகத்தில் களவாடப்பட்ட பெறுமதிமிக்க நகைகள் மற்றும் கைத்தொலைபேசிகளுடன் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முற்பகல் ஊர்காவற்றுறை நாரந்தனைப் பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருகையில்,

வழமைபோன்று பகல் வீதி கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்றுறை பொலிஸ் அணியினர் நாரந்தனை பகுதியில் ஈடுபட்டிருந்த போது வீதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் ஒருவர் நடமாடியதை அவதானித்துள்ளனர். அவரை மறித்து சோதித்த போது அவரது உடைமையில் இருந்து தாலிக்கொடி, சங்கிலி, மோதிரங்கள், பென்ரன்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது அவை சுன்னாகம் பகுதியில் களவாடப்பட்ட பெறுமதிமிக்க நகைகள் என தெரிய வந்தது.

இதையடுத்து குறித்த சந்தேக நபரின் வீட்டுக்கு சென்று சோதனைகளை மேற்கொண்டபோது அங்கு பல நவீன கைத்தொலைபேசிகள், ஒருதொகைப் பணம் இலத்திரனியல் சாதனங்கள் உள்ளிட்ட பல பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார், சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து குறித்த சந்தேக நபரையும் மீட்கப்பட்ட பெறுமதிமிக்க பொருட்களையும் சுன்னாகம் பொலிஸாரிடம் ஊர்காவற்றுறை பொலிஸார் ஒப்படைத்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (8-104)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி-பா: 09<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc, MA<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15901 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம் : கார்த்திகை<br>12 இல் சூரி செவ்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/15904 |
| பிறப்பு:1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம் :5'9"<br>தகைமை/தொழில்-Doctor(UK)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்<br>தொ.இ: B/15902 | பிறப்பு: 1995 RC<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BIT, Lecturer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/15905 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>8 இல் செவ்<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்:BSc,Software Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15903 | பிறப்பு: 1999 இந்து<br>நட்சத்திரம்- திருவோணம்<br>உயரம்-5'7"<br>தகைமை/தொழில்: BFA (Final year)<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15906 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி-பா: 22<br>12 இல் சூரி செவ்<br>உயரம்:5'11"<br>தகைமை/தொழில்-Management, Gov work<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15909 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 28<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில் -BSc, pvt Work<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15907 |
| பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம் : பரணி<br>2 இல் செவ்<br>உயரம்:5'11"<br>தகைமை/தொழில்: BSc(IT), Msc(UK)<br>எதிர்பார்ப்பு: Graduate(Science,IT)<br>தொ.இ: B/15910 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>12 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் -MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/15908 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகள போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகள போட்டிகள் நாளை சனிக்கிழமை முதல் தொடர்ந்து 5 நாட்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் வடமாகாணத்திற்கு உட்பட்ட 12 கல்வி வலயங்களைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் பங்கு பற்றவுள்ளனர்.

இதில் முதல் நாள் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சனும், நிறைவு நாளான புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி.தனுஜா முருகேசனும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-90)


அகவை அறுபது காணும்
மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில்
10 வருடங்களாக அர்ப்பணிப்புடன்
கடமையாற்றி 15.08.2025 இல்
தனது 60 ஆவது வயதில் ஓய்வுபெறும்
சிரேஷ்ட இசை ஆசிரியை

திருமதி.கிருதகௌரி அரங்கண்ணல்
(BFA, PGDE, சங்கீத கலாவித்தகர்)


சேவை விபரம்
கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம் (1998.07.20 - 2010.12.31)
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி (2011.01.01 - 2015.04.21)
யா/கோப்பாய் மகா வித்தியாலயம் (2015.04.22 - 2025.08.15)
(இக்காலப்பகுதியில் ஆசிரியரின் நெறிப்படுத்தலில் தனி இசை வயலினில் தேசிய மட்டத்தில் முதலிடத்தை ஒரு மாணவி பெற்றிருந்தார்)

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்
யா/கோப்பாய் மகா வித்தியாலயம்.
(5039)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# சந்திப்பிற்கு
# போர் தொட
## புடினுக்கு எச்சரிக்



(வோஷிங்
அமெரிக்க
டொனால்ட் ட்
அலஸ்காவில் சந்
ஜனாதிபதி புடின்
சந்திப்பினால் உ
போர் ஒரு
வாய்ப்புள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது.

இன்னும் இரு நாடுகளுக்கு இடையிலான போர் முடிவுக்கு வரவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், போரை முடிவுக்குக் கொண்டு வர பல்வேறு முயற்சிகள் எடுத்து வருகிறார்.

இதன் தொடர்ச்சியாக நாளை இருவரும் சந்தித்துப் பேச இருக்கிறார்கள்.

அப்போது ரஷ்யா- உக்ரைன் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்த நிலையில், இன்று

---

## நூற்றுக்கணக்கான அகதிகளுடன் நடுக்கடலில் கவிழ்ந்த படகு

- 60 பேர் உயிருடன் மீட்பு
- 26 பேர் உயிரிழப்பு
- தேடும் பணி தீவிரம்



(உரோம்)

இத்தாலிய தீவான லெபிடுசாவுக்கு அருகில், சர்வதேச கடல் பகுதியில் 100 புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் குறைந்தது 26 பேர் கொல்லப்பட்டனர்.

மற்றும் பலர் காணாமல் போயுள்ளனர் என்று இத்தாலிய கடலோர காவற்படை தெரிவித்துள்ளது.

ஆபிரிக்கா, எகிப்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா போன்ற நாடுகளைச் சேர்ந்த மக்கள் வாழ்வாதாரத்துக்காக ஐரோப்பிய நாடுகளுக்குள் கடல் வழியாக பிரயாணம் செய்து அகதிகளாக நுழைகின்றனர்.

இந்நிலையில் லிபியாவிலிருந்து 97 பேர் மத்திய தரைகடல் வழியாக நேற்று சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த அகதிகள் பயணித்த படகு இத்தாலியின் லெபிடுசா தீவுக்கருகில் சென்றபோது திடீரென கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த இத்தாலி கடற்படையினர் கடலில் மூழ்கிய அனைவரையும் மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் 60 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஆனால், துரதிர்ஷ்டவசமாக 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதோடு மேலும் 17 பேரின் நிலை என்னவென்று தெரியாத நிலையில் அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. (ரி)

---

## ஒருநாளில் மட்டும் 123 பேர் உயிரிழப்பு

### கொன்றழித்தது இஸ்ரேல் இராணுவம்

(காசா)

பாலஸ்தீன நாட்டின் முக்கிய நகரமான காசாவில் இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் புதன் கிழமை மட்டும் 123 பேரை கொன்று குவித்துள்ளது.

ஜைடவுன் பகுதியில் நடந்த கடுமையான குண்டுவீச்சில் 12 பேர் கொல்லப்பட்டனர். சப்ரா மற்றும் ஷேக் ரத்வானிலும் தாக்குதல்கள் நடந்தன. அங்கு உணவுக்காகக் காத்திருந்தபோது 21 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே நேற்று முன்தினம் காசாவில் மூன்று குழந்தைகள் உட்பட மேலும் எட்டு பேர் பட்டினியால் உயிரிழந்துள்ளனர்.

இதன் மூலம் காசாவில் பட்டினியால் இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 235 ஆக உயர்ந்துள்ளது. இதில் 106 குழந்தைகள் அடங்குவர்.

இரண்டு ஆண்டுகளாக நடந்து வரும் இந்தப் போரில், இதுவரை 61,722 பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலால் கொல்லப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆவர்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே நிரந்தர போர் நிறுத்தம் மற்றும் பணயக் கைதிகளை விடுவிப்பது குறித்து எகிப்து, கட்டார், மற்றும் அமெரிக்கா தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

இதற்கிடையே, இஸ்ரேல் காசா நகரை முழுமையாகக் கைப்பற்றத் திட்டமிட்டுள்ளது. (ரி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# த பின்
# டர்ந்தால்...!
# கை விடுத்த ட்ரம்ப்

(...ிங்டன்) ...........
...ிக்க ஜனாதிபதி
ட்ரம்பை இன்று
சந்திக்கிறார் - ரஷ்ய
...டின். இவரின் இந்தச்
...் உக்ரைன் - ரஷ்ய
முடிவுக்கு வர
...



வெள்ளிக்கிழமை சந்திப்புக்குப்பின் உக்ரைன் போரை புடின் தொடர்ந்து நடத்தினால், ரஷ்யாவுக்கு மிகக் கடுமையான விளைவுகள் இருக்கும் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாட்டுத் தலைவர்களுடன் டொனால்ட் ட்ரம்ப் காணொளி மூலம் ஆலோசனை நடத்தினார்.

அப்போது, அலாஸ்காவில் நடைபெறும் அமெரிக்கா - ரஷ்யா மாநாட்டின்போது, போர் நிறுத்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற அமெரிக்கா விரும்புகிறது என்பதை தெளிவாக ட்ரம்ப் கூறியதாக பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் தெரிவித்துள்ளார். (நி)

## மகுடம் சூட்டப்பட்ட உலகின் அழகற்ற நாய்

(வோஷிங்டன்)

இரண்டு வயதான ஆங்கில-பிரெஞ்சு புல்டாக் கலவையான பெட்டூனியா என்ற நாய், "உலகின் அசிங்கமான நாய்" என்று முடிசூட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஓரிகான் மாநிலத்தின் யூஜினைச் சேர்ந்த இந்த நாய்க்குட்டி, கடந்த வாரம் கலிபோர்னியா மாநிலத்தின் சாண்டா ரோசாவில் உள்ள




சோனோமா கவுண்டி கண்காட்சியில் இந்தப் போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இந்திய மதிப்பில் ரூ.4.3 லட்சத்திற்கு மேல் பரிசை வென்று அசத்தியது.

இந்த நாய்க்குட்டி 8 வயதான சீனாவைச் சேர்ந்த க்ரெஸ்டட் நாய் மற்றும் 13 வயது சிவாவா நாய் உட்பட 10 போட்டியாளர்களை வீழ்த்தி பெட்டூனியா வெற்றியாளர் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது. (நி)

## இலங்கையிலும் சாதனை படைத்த 'கூலி' திரைப்படம்




(டில்லி)

ரஜினிகாந்த் நடித்துள்ள கூலி திரைப்படம் உலகம் முழுவதும் நேற்று வெளியாகியது.

மாஸ்டர், லியோ, விக்ரம் ஆகிய படங்களின் வரிசையில் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் கூலி படத்தை இயக்கியுள்ளார்.

முழுக்க முழுக்க ஆக்ஷன் த்ரில் ஜானரில் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் படத்தில் ரஜினியுடன் இணைந்து சத்யராஜ், உபேந்திரா, நாகர்ஜுனா, சௌபின் ஷாகிர், காளி வெங்கட், ஸ்ருதி ஹாசன் என்று ஏராளமான பிரபலங்கள் நடித்துள்ளனர்.

கூலி படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

மேலும், சன் பிக்சர்ஸ் நிறுவனம் ரூ.400 கோடி பட்ஜெட்டில் இந்தப் படத்தை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே படத்தின் ப்ரீ புக்கிங் மற்றும் ஓடிடி உரிமை மூலமாக இந்தப் படம் தயாரிப்பாளருக்கு ரூ.300 கோடி வரையில் லாபம் கொடுத்துள்ளதாக தகவல் வெளியாகி வருகிறது.

இது ஒரு புறம் இருந்தாலும் 2025 ஆம் ஆண்டில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட படங்களில் ரஜினிகாந்தின் கூலி படமும் ஒன்று.

அதோடு, இதுவரையில் எந்த கோலிவுட் படமும் ரூ.1000 கோடி வரையில் வசூல் குவிக்காத நிலையில் அதனை சூப்பர் ஸ்டாரின் கூலி படம் அசால்டாக முறியடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தான் கூலி படம் ப்ரீ புக்கிங்கில் டைம்ஸ் ஆப் இந்தியா கணிப்பின்படி.

தமிழகத்தில் ரூ.27 கோடியும், இந்தியாவில் மட்டும் ரூ.53 கோடியும், உலகளவில் ரூ.35 கோடி வரையிலும் வசூல் குவித்து ப்ரீ புக்கிங்கில் மட்டும் மொத்தமாக ரூ.88 கோடி வரையில் வசூல் குவித்துள்ளது.

கூலி ஃப்ரீ புக்கிங்கில் வட அமெரிக்காவில் 2 மில்லியன் டொலர் வசூல் குவித்து சாதனை படைத்தது.

இந்த நிலையில் இலங்கையிலும் கூலி படம் ரூ.4.85 கோடி வசூல் குவித்து சாதனை படைத்துள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் ஓய்வூதியத் திட்டம் மீள ஆரம்பம்

(கொழும்பு)

கைவிடப்பட்டிருந்த மீனவர் ஓய்வூதிய திட்டம் அடுத்த மாதத்தின் முதல் வாரத்திற்குள் மீள ஆரம்பிக்கப்படுமென கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

தகுதியானவர்களை அடையாளங்காணும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக சபையின் தலைவர் பிரேமசிறி ஜாசிங்க ஆரச்சி குறிப்பிட்டுள்ளார். இந்தத் திட்டத்தை விவசாய அமைச்சு மற்றும் கடற்றொழில் அமைச்சு ஆகியன இணைந்து மீள ஆரம்பித்துள்ளதாக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது. (நி)



# காலைப் பொழுது

இயற்கை எம்மைச் சூழ்ந்திருக்கிறது. அதனுடைய மாற்றமான தோற்றங்கள், மனிதருக்கு வியப்பைத் தருகின்றன. காலத்தின் கடப்பை, அவை மனிதனுக்கு உணர்த்துகின்றன. ஒரு நாளின் தொடக்கத்தையும் நிறைவையும் மனிதன் அவற்றால் கணித்துக் கொண்டான். காலைப்பொழுது, அக் கணிப்பில் ஒரு நாளின் தொடக்கமாக அமைந்தது.

இருள் விலகி வானம் செம்மை வண்ணம் பெறும். விண்மீன்கள் மறையும். கதிரவனின் செங்கதிர்கள் எங்கும் ஒளியைப் பாய்ச்சும். கிழக்குத் திக்கிலே வட்டமான ஒரு ஒளிப் பந்து மேலெழுந்து வரும். இந்த அழகிய கோலத்தைக் கடற்கரையிலே நின்று பார்ப்பது மிக அழகாக இருக்கும்.

இருள் பிரியும் வேளைக்கு விடியல் என எம்முன்னோர் பெயரிட்டிருந்தனர். ஆனால் அதற்கு முன்னர் "விடிவெள்ளி" என ஒளிரும் விண்மீன் ஒன்றை கிழக்குத் திசையிலே காணமுடியும். விடிவெள்ளி தோன்றும் வேளைக்கு "வைகறை" எனப் பெயரிட்டனர். இச்சொற்களை இபோது பயன்படுத்தப்படுவது அருகி வருகிறது.

கதிரவனின் ஒளிக்கதிர்களால் முற்றாக இருள் கலைய அவ்வேளை காலை "எனப் பட்டது. 'கால்தல்' என்றால் 'ஒளிர்தல்' என்று பொருள். எனவே எல்லாவற்றையும் தெளிவாகப் பார்க்கக் கூடிய பொழுது 'காலைப் பொழுது' என வழங்கப்பட்டது. இந்தக் காலைப் பொழுதைப் பறவையினங்களும் மனிதனுக்கு உணர்த்தின. தம்முடைய ஒலிப்பினால் தூங்கும் மனிதரை எழுப்பின. பறவைகளின் கலகலப்பான ஒலி மனிதனுக்குக் காலைப் பொழுதின் வரவைக் கூறியது. காகம் என்னும் பறவை காவையிலே கரையும் என்ற மரபான வழக்கு ஒன்றும் தமிழிலே உண்டு.


மனிதனுடைய செயற்பாடுகள் காலைப் பொழுதில் தொடங்கப்பட்டன . பண்டைக்காலத்தில் உணவுத் தேட்டமே மனிதனின் முழுமையான செயற்பாடாக இருந்தது. அவன் தன்னைச் சார்ந்தவர்களுக்குரிய உணவைத் தேடும் முயற்சிகளை மேற்கொண்டான். மனிதன் வாழ்ந்த நிலத்தின் இயல்புக்கு ஏற்ற உணவுகளைத் தேடினான் வேட்டையாடல், ஆநிரை மேய்ந்தல், பயிர்ச் செய்கை, மீன்பிடித்தல் என வேறுபட்ட தொழில்களை அவன் மேற்கொண்டான். காலைப் பொழுதில் அத்தகைய தொழில்களை அவன் செய்யும் போது அப்பொழுதை ஒரு நாளின் தொடக்கமாக வரையறை செய்து கொண்டாள்.

மனிதன் நிலையாகக் குடும்பமாக ஓரிடத்தில் நிலையான வாழ்வு நடத்தும் போது இல்லம் என்றதொரு அமைப்புத் தோன்றியது. காலைப் பொழுதில் அந்த இல்லத்தையும் சூழலையும் தூய்மையாகப் பேண வேண்டும் என்ற புதியதொரு எண்ணம் தோன்றியது. இன்னும் தனது செயற்பாடுகளுக்குத் துணையான விலங்குகளையும் இயங்க வைககும் நிலை தோன்றியது. உழவுக்குத் துணை செய்த மாடு, குதிரை, வேட்டைக்குத் துணை செய்த நாய் என்பவற்றையும் காலைப் பொழுதிலே கூட்டிச் செல்லும் காட்சி கண்ணுக்கு நல் விருந்தாக அமைந்தது.

அதனால் எல்லோரும் சுறு சுறுப்பாக இயங்கும் பொழுதாகவும் காலைப் பொழுது அமைந்தது. கதிரவனின் ஒளியால் மரங்கள் பசுமை பெற்றன. நீர்நிலைகள் தெள்ளிய நீரை வழங்கின. இயற்கையின் அழகிய கோலமாக வண்ண மலர்கள் மலர்ந்தன. எங்கும் பசுமையும் நறுமணமும் பொலிய காலைப் பொழுது அழகிய பொழுதாக அனைவரையும் இயங்க வைத்தது.

உணவுத்தேட்டம் என்ற நிலையிவிருந்து மனிதன் அறிவுத் தேட்டம் என்ற நிலைக்கு வளர்ந்த போது காலைப் பொழுது அதற்குரிய சிறந்த பொழுதாக அமைந்தது. மனிதன் தன்னுடைய பட்டறிவினாலே தனது இளையோருக்கு அறிவூட்டல் செய்தான். அதுவே வாய்மொழிக் கல்வியாக அமைந்தது. கருவிக் கையாட்சி பற்றியும் பருவமாற்றங்கள் பற்றியும் இயற்கையின் கொடைகள் பற்றியும் ஆற்றல்கள் பற்றியும் பல கருத்துகளை விளக்கும் கற்பித்தல் முறையும் தோன்றியது. காலை வேளையில் ஒரு மரத்தினடியில் இக் கல் விப் பயிற்சி நடைபெற்றது. மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் புகட்டப்பட்டன. சிறியவர் அவற்றைக் காலையிலேகேட்டுச் செயற்படும் மரபு உருவாகியது. வீட்டுக்கல்வி பள்ளிக்கல்வியாக மாறிய போதும் காலைப் பொழுதில் கற்கும் மரபு தொடர்ந்தது. இதனையே பாரதியார் "காலைஎழுந்தவுடன் படிப்பு" எனப் பாப்பாப் பாட்டில் பதிவு செய்து காலைப்பொழுதின் மரபான சிறப்பை விளக்கியுள்ளார்.

**வெள்ளி நற்சிந்தனை 01**



(முனைவர் ச.மனோன்மணி)

# அலங்காரா நல்லூரா! தம்ப விம்ப புதிய யாகசாலை கும்ப தரிசனம் அன்புடன் திருவருள் பதிய சிவஞானமடைவர்

**ஆதி சக்தி வேலவனே ஆறுபடை நாயகனே**
**நீதித் தமிழ் வளர்த்த நின் மலனே சோதியே**
**அன்பு மனந்தருளுவாய் ஆனந்த வாழ்வுயுர**
**இன்பம் நிலையருள்வாய் நிறைந்து**

திருவிழாக்கள் திருக்கோயில்களிற் செய்வது. எம்மைச் **சிவத்தன்மையடையச்** செய்து இறைவனைப் பற்றி.

மலவிருளில் மூழ்கி வருந்தும் உயிர்களுக்கு இறைவன் அறிவு விளக்கமுண்டாக்கி. மலத்தைக் கெடுத்துச் சிவத்தன்மையைக் கொடுத்து பேரின்பத்தை நுகரச் செய்கிறார்.

திருவிழாக்கள் வழிபடுகின்ற எல்லோருக்கும் திருவருள் பாலிக்கும் தீக்கைக் கால மெனப் படுதலால் எல்லோரும் தம்மைக் குருதீக்கையால் வீடுபேறடையச் சீடனாகப் பாவித்து மன மொழி மெய்களை முருகனுக் காக்கி ஆலயத்தில் உலகத்துச் சிந்தை, **உலகத்துப் பேச்சு, உலகத்துச் செயல்கள்** இன்றி மெய்யன்போடு நிறையத் தொழுது பேரின்பத்திலே நிறைத்தல் வேண்டும்.

திருவிழாக்காலத்தில் **தம்ப, விம்ப, கும்பம்** ஆகிய மூன்றும், நமது ஐம்புலன்கள் உள்ளத்தில் ஆன்மா ஆரோக்கியமாக நுகர்ந்து இறையாற்றலால் உயிர் முருகனுடன் இரண்டறக் கலந்து பேரின்பமடையும் என்பது கொடியேற்றம் எனப்படும்.

**தம்பம்** - கொடிமரம் பதியாகிய சிவத்தையும், அதில் ஏற்றப்படும் **கொடிச்சீலை** பசுவாகிய உயிரையும், கொடிச்சீலையோடு சேர்ந்திருக்கும் **தருப்பைக் கயிறு** உயிரை வருத்தும் பாசமாயும், கொடியேற்ற விழாவிற்றருப்பைக் கயிற்றுடன் கொடிச்சீலையைக் கொடிமரத்தில் சுற்றுவது **முத்தி நிலையிற் பாசமொடுங்க முருகனுடன் கலந்து பேரின்பமடையும்** என்பதனையும் அந்த நிலையிற் உயிர் இறைவன் முருகன் அலங்காரன் சிவத்துடன் கலந்து ஒரு அருள் பொருளாம் என்பதையும் குறிக்கும்.

வசந்தமண்டபம் அருள்மிகு வள்ளி தெய்வானை உடன் உறை அலங்கார முருகன், அருள்வேள் **விம்ப** தரிசனம் எல்லோரும் கந்தர் அலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், திருவாசகம், திருமுறைகள் ஓதியும், நமது கரம் குவித்து சிரம் தாழ்த்தி அன்புடன் வணங்க தரிசிக்கும் வழிபாடு செய்யும். சீடராகிய அடியார்களுக்கும், அலங்காரா! நல்லூரா **எழுந்து அருளி மனத்தில் வெளிப்பட்டு பேரின்ப அருள் செய்வான் நமது முருகன்**

யாகசாலை பூசையிலும், அருள் குவிந்து மனமும் மொழியும் அன்புடன் பதிய வைத்து **கும்பம்** தரிசித்து கற்பகத்கந்தன் அலங்காரா நல்லூரா எம் பெருமான் பேரருள் பெற்று உய்வோம்.


கடந்த பத்து மாதங்களாக அதி இறையாற்றலுடன், அனந்த ஆசனம், சிம்ம ஆசனம்,யோக ஆசனம், பத்ம ஆசனம், விமல ஆசனம் இவ்வாறு அருள் தரும் பஞ்ச ஆசனங்கள், பெறுமதியான அருள்மிகு உலோகங்களால் அமைந்த அருள்மிகு அலங்கார பீடத்தில், அருள் கும்பத்தில் அருள்மிகு திரவியங்கள் உயர் அருள் கங்காநீர் நிரப்பி 2025 ஆம் ஆண்டு அருள்மிகு திருவிழாவில் புதிய யாகசாலையில் அலங்காரக் காட்சி கிடைத்தது நல்லூரா! அலங்காரா! கந்தன் காட்சி பேரருள் என்பதனை அறிவின் அறிந்து வழிபடுவோம்.

**நாம் பேசும் வாய் படைத்த பயன் என்ன?**
**"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சு**
**தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை"**

அப்பர் அருளியவாறு நாம் ஆலயத்தில் வாழ்த்தாவிட்டால் ஆண்டவன் என்ன செய்வான். இறைவன் இவனுக்கு வாய் கொடுத்துப் பயன் இல்லை. அதனால் தொடரும் பிறவியில் **"வாயில்லாப் பிராணியாகவே போகட்டும்"** என்று செய்துவிடுவான்.

நன்றாகப் பேசக்கூடிய வாயை பெற்றிருந்தும், அந்த வாயையும், நாவையும் கொடுத்த இறைவனைப் புகழாதவனுக்கு வாய் இருந்தும் என்ன பயன்? என்பதனை **"எந்தைநிலை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும் ஏக்கற்றிருக்கும் வெறுவாய்"** என்று வருந்திச் சொல்கிறார் இராமலிங்க சுவாமிகள். **ஆலயத்திலாவது கோபுரம் அட்டாங்க நமஸ்காரம் ஆண்கள், பஞ்சாங்க நமஸ்காரம் பெண்கள் செய்வது வரம் கூப்பி சிரம் தாழ்த்தி திருப்புகழ் திருமுறை ஓதியும் அலங்காரா! நல்லூரா என வாழ்த்தி வணங்கி, முன்னே நம் பெரியோர்கள் வழியில் நாமும் செல்வது நல்லதும், நமது ஆன்மாவுக்கு நல்ல ஆரோக்கியம் கிடைத்து நாமும் வாழ்வோம்.**

**க.கு.க.சிவபாலன்- போசகர்**
**ஈழத்துச் சிதம்பரம்**
**மாணிக்கவாசகர் மடாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முல்லைத்தீவு - வள்ளிபுனம் இடைக்கட்டு செஞ்சோலை வளாகத்தில், கடந்த 2006.08.14அன்று இலங்கை விமானப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டுவீச்சுத் தாக்குதலில் படுகொலைசெய்யப்பட்ட 54 மாணவர்களுக்கும், 7 பணியாளர்களுக்குமான 19 ஆம்ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற வள்ளிபுனம் இடைக்கட்டுப்பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்றது. குறித்த இந்த நினைவேந்தல் நிகழ்வில், சுடரேற்றப்பட்டு, மலர்தூவி உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. (8-299-281)

## அனுமதியின்றிக் குழாய்க்கிணறு அமைத்தால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

### தவிசாளர் ஜயந்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக் குட்பட்ட பிரதேசத்தில் பிரதேச சபையின் அனுமதியின்றி குழாய்க்கிணறு அமைத்தல் உடனடியாக அமுலாகும் வகையில் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் பிரதேச சபை எல்லைக்குள் குழாய்க்கிணறு அமைக்கும் பணியில் ஈடுபடும் இயந்திரம், பொறித் தொகுதிகள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் பதிவு செய்திருத்தல் கட்டாயமானது.

இந் நடைமுறைகளை மீறி குழாய்க்கிணறு அமைக்கும் பணியில் ஈடுபடும் இயந்திரம், பொறித் தொகுதிகள் சபையால் பறிமுதல் செய்யப்படுவதுடன் ஆதன உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தினூடாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும் என தவிசாளர் ச. ஜயந்தன் அறிவித்துள்ளார். (8)

## ஆதன வரி தொடர்பில்

### வேலணை பிரதேச சபையின் அறிவித்தல்


(யாழ்ப்பாணம்)

வேலணை தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள காணி உரிமையாளர்களுக்கு ஆதன வரி அறவிடல் தொடர்பாக வேலணை பிரதேச சபை விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் வேலணை பிரதேச சபையின் ஆளுகைக் குட்பட்ட வேலணை தெற்கு கிராம சேவையாளர் பிரிவு ஜே/17 இல் ஆதன வரி அறவிடல் செயற்பாடுகளை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் (4ஆம் காலாண்டு) ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதன் பிரகாரம் குறித்த பிரதேசத்தில் வாழும் காணி உரிமையாளர்கள் தமது காணி தொடர்பான பொருத்தமான ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருப்பதுடன் காணிகளை துப்புரவு செய்து எல்லைப் படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (8-33)

**யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட மனிதவள சிறப்புத் துறை 27 ஆம் அணி மாணவர்கள் யாழ். பொலிஸ் நிலைய அதிகாரிகளுடன் இணைந்து நடத்திய இரத்த தான நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை யாழ். பிரதான பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றது.**



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 180 | 150 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 150 | 200 |
| தக்காளி | 150 | 200 | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 300 | 340 | 350 | 300 | 300 |
| கரட் | 500 | 550 | 600 | 600 | 600 |
| பூசணி | 100 | 140 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 100 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-250 | 300 | 220 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 140 | 130 | 200 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 450 | 400 |
| வெண்டக்காய் | 150 | 100 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 200 | 250 | 400 |
| பயற்றங்காய் | 250 | 250 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 250 | 250 | 350 | 220 | 250 |
| பீற்றூட் | 150 | 100 | 180 | 120 | 150 |
| கறிமிளகாய் | 400 | 500 | 500 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 400 | 200 | 300 |
| போஞ்சி | 700 | 700 | 800 | 600 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 200 | -- | 150 |
| கீரை – 1 பிடி | 100 | 40-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 250 | 100 | 100 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-170 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 650 | 600 | 500 | 900 |
| வெங்காயப்பூ | 400 | 250 | 400 | 250 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | -- | 250 |

## கிளிநொச்சி பளைப் பகுதியில் வீடொன்றின் மீது தாக்குதல்

(அராலி)

கிளிநொச்சி - பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சோறன்பற்று பகுதியில் வீடு ஒன்றின் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள வீட்டிற்குள் நேற்று முன்தினம் இரவு 08.30 மணியளவில் இனம் தெரியாத நபர்கள் உள்நுழைந்துள்ளனர்.

முகத்தை மூடி மறைத்து கத்தி, வாள்கள், பெற்றோல் குண்டுகள் ஆகியவற்றுடன் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு நபர்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து உடைமைகளுக்கு சேதம் விளைவித்ததுடன் தீயிட்டும் எரித்துள்ளனர்.

இதில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள், கதவுகள், கண்ணாடிகள், குளிர்சாதனப்பெட்டி, அலுமாரிகள், ஏனைய பெறுமதியான ஆவணங்களுடன் பெறுமதியான வீட்டு உபகரணங்களும் சேதமடைந்துள்ளன.

வீட்டில் இருந்தவர்கள் அபயக் குரல் எழுப்ப தொடங்கியதும் தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் பெற்றோல் போத்தலையும் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் சம்பவம் தொடர்பாக பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டதன் பிரகாரம் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-104)

## வவுனியா பொருளாதார மத்திய நிலையத்திற்கு வர்த்தக அமைச்சர் விஜயம்!

(வவுனியா)

வவுனியா மதவு வைத்த குளத்தில் அமைந்துள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தை வர்த்தக வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க நேற்றுமுன் தினம் பார்வையிட்டிருந்தார்.

கடந்த 8 வருடங்களுக்கு முன்பு வவுனியாவில் 200 மில்லியனுக்கும் அதிகமான பணத்தை முதலிட்டு அமைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையம் இதுவரை இயங்காமல் உள்ளது.

இந்நிலையில் அதனை இயங்கச்செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் அதற்கான முன் ஆயத்தப் பணிகளை அமைச்சர் பார்வையிட்டிருந்தார்.இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர்,

பல மில்லியன் ரூபாய் பணம் இந்தப் பொருளாதார மத்தியநிலையத்தில் செலவிடப்பட்டுள்ளது. எனவே இம் மாத இறுதிக்குள் இதில் செய்யவேண்டிய திருத்தப் பணிகளை செய்துவிட்டு எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் முற்பகுதிக்குள் அதனைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் ஏற்கனவே வவுனியா மொத்த வியாபாரச் சந்தையில் உள்ள 35 வியாபாரிகளுக்கு மத்திய நிலையத்தில் உள்ள கடைகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

மிகுதி 15 கடைகள் விவசாய அமைப்புக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார். (8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 845





இதைப் பூங்குழலியிடமும் வெளியிட்டான். அவளும் அது நல்ல யோசனை தான் என்று சொன்னாள். ஆனால் மூடுபல்லக்கின் உள்ளே இருக்கும் ராணியை எப்படிப் பார்ப்பது? சிவிகைக்கு பின்னும் காவலர்கள் போகிறார்களே? பல்லக்கின் அருகிலே போக முயன்றாலே அவர்கள் தடுப்பார்கள் அல்லவா?

“அமுதா! கவலைப்படாதே! தஞ்சாவூர்க் கோட்டை இன்னும் அரைக்காதம் இருக்கிறது. அதற்குள் நமக்கு ஏதேனும் சந்தர்ப்பம் கிட்டாமற் போகாது!” என்றாள் பூங்குழலி.

எதிர்பாராத விதத்தில் அச்சந்தர்ப்பம் அவர்களுக்கு கிட்டியது.

### 21 ஆம் அத்தியாயம்
### பல்லக்கு ஏறும் பாக்கியம்

அந்த ஆண்டில் வழக்கமாக மாரிக்காலம் ஆரம்பிக்க வேண்டிய காலத்தில் ஆரம்பிக்கவில்லை. இரண்டு தடவை மழை தொடங்குவது போல் தொடங்கிச் சட்டென்று நின்று விட்டது. காவேரி ஆற்றிலும் அதன் கிளை நதிகளிலும் தண்ணீர்ப் பிரவாகம் வரவரக் குறைந்து வந்தது. புது நடவு நட்ட வயல்களுக்குத் தண்ணீர் வரத்து இல்லாமல் பயிர்கள் வாடத்தொடங்கின. “எல்லாம் வால்நட்சத்திரத்தினால் வந்த விபத்து!” என்று மக்கள் பேசிக் கொள்ளலானார்கள்.

‘நாட்டுக்கு எல்லா விதத்திலும் பீடை வரும் போலத் தோன்றுகிறது’, ‘இராஜ்ய காரியங்களில் குழப்பம்’, ‘இளவரசரைப் பற்றித் தகவல் இல்லை’, ‘அதற்கு மேல் வானமும் ஏமாற்றி விடும் போலிருக்கிறது’ என்பவை போன்ற பேச்சுக்களை வழி நெடுகிலும் சேந்தன் அமுதனும் பூங்குழலியும் கேட்டுக் கொண்டே வந்தார்கள்.

மழை பெய்யாமலிருந்தது அவர்களுடைய பிரயாணத்துக்கு என்னமோ சௌகரியமாகத்தானிருந்தது. அன்று காலையிலிருந்தே வெய்யில் சுளீர் என்று அடித்தது. பிற்பகலில் தாங்க முடியாத புழுக்கமாயிருந்தது. இராஜ பாட்டையில் மரங்களின் குளிர்ந்த நிழலில் சென்ற போதே அவர்களுக்கு வியர்த்துக் கொட்டியது.

“இது ஐப்பசி மாதமாகவே தோன்றவில்லையே? வைகாசிக் கோடை மாதிரியல்லவா இருக்கிறது?” என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு போனார்கள்.

பழுவேட்டரையரின் அரண்மனைப் பல்லக்கு அவர்களைத் தாண்டிச் சென்ற சிறிது நேரத்துக்குப் பிறகு திடீரென்று குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது. சாலை மரங்களின் இலைகள் காற்றில் அசைந்தாடிச் சலசலவென்று சத்தத்தை உண்டாக்கின. வடகிழக்குத் திக்கில் இருண்டு வருவது போலத் தோன்றியது. வானத்தின் அடி முகட்டில் இருண்ட மேகத் திரள்கள் தலை காட்டின.

சிறிது நேரத்துக்குள்ளே அந்த மேகக் கூட்டங்கள் யானை மந்தை மதம் கொண்டு ஓடி வருவது போல் வானத்தில் மோதி அடித்துக் கொண்டு மேலே மேலே வரலாயின.

இளங்காற்று பெருங்காற்றாக மாறியது. பெருங்காற்றில் சிறிய மழைத் துளிகள் சீறிக் கொண்டு வந்து விழுந்தன. சிறு தூற்றல் விழத் தொடங்கிக் கால் நாழிகை நேரத்தில் ‘சோ’ என்ற இரைச்சலுடன் பெரு மழை கொட்டலாயிற்று.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குடியானவனின் யோசனை



(நேற்றைய தொடர்ச்சி)

அங்கு அவன் புதைத்து வைத்திருந்த சட்டியை எடுத்துக் கொண்டு வீடு வந்தான். அங்கு அனைவரின் முன்னால் சட்டியுடன் நகைகளை எடுத்து மாப்பிள்ளை சீதனமாகக் கொடுத்தான். அதனைப் பெற்றுக்கொண்ட பெண் வீட்டார். சொல்லியபடி நாளை காலையில் சந்தைக்கு சென்று ஒரு நல்ல பசுமாட்டை வாங்கிக் கொடுத்து விட்டு ஒரு நல்ல நாளில் பெண்ணை அழைத்துக்கொண்டு வந்து மணமுடித்துக் கொடுப்பதாக அறிவித்தனர். இப்பொழுது இரவு வேளை ஆகி விட்டதால், வழியில் கள்வர் பயம் இருக்கும். ஆதலால் மாப்பிள்ளை வீட்டில் இரவு தங்கிவிட்டு நாளை காலையில் அப்படியே சந்தைக்கு செல்லலாம் என்று முடிவு செய்து அங்கேயே இரவு தங்கினர்.

அவர்களுடன் வந்திருந்த களவாணி நடு இரவில் அனைவரும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த வேளையில் மெல்ல எழுந்து பெண் வீட்டார் பத்திரப்படுத்து வைத்திருந்த சட்டியை மெல்ல எடுத்து அதில் இருந்த அனைத்து நகைகளையும் எடுத்துக் கொண்டு அங்கிருந்த பச்சை மிளகாய்களை அதனுள் போட்டு சத்தமில்லாமல் வந்து படுத்து விட்டான்.

மறு நாள் காலையில் எழுந்திருந்த பெண் வீட்டார் சந்தைக்கு சென்று நல்ல பசு மாட்டை பிடித்து மீண்டும் இவன் வீட்டில் கொண்டு வந்து கட்டி விட்டு இனி பேசியபடி பெண்ணை மணம்முடித்து தருவதாகச் சொல்லி விட்டு சென்றனர். ஒரு வாரம் கழித்து பெண் வீட்டாரிடமிருந்து எந்த பதிலும் வராததால் குடியானவன் பெண் வீட்டாரிடம் சென்று அதற்கு பின் ஏன் ஒருவரும் வரவில்லை என்று கேட்டான்.

பெண் வீட்டார் கோபத்துடன் நகைகளை கொடுத்து இரவோடு இரவாக மாற்றி வைத்து விட்டவனுக்கு, எங்கள் பெண்ணைக் கொடுக்க சம்மதமில்லை என்று தெரிவித்து விட்டனர்.

குடியானவனுக்கு ஒன்றும் புரியவில்லை, என்ன நடந்தது என்று விளக்கமாகக் கூறுங்கள் என்று கேட்டான். இவர்கள் வீடு வந்து சட்டியைத் திறந்து பார்த்தபொழுது பச்சை மிளகாய்தான் உள்ளே இருந்தது என்று கூறினார்கள். கூடவே வந்தவர்கள் யாரோ நகையை எடுத்து இருக்க வேண்டும் என்று முடிவு செய்த குடியானவன், உங்களுடன் வந்திருந்த உறவுக்காரர்களிடம் இந்த விடயத்தை சொல்லிவிட்டீர்களா என்று கேட்டான். அவர்கள் இன்னும் யாரிடமும் சொல்லவில்லை. நீங்கள் வந்து கேட்ட பின்னால் சொல்லிக் கொள்ளலாம் என்று முடிவு செய்திருந்தோம் என்றனர்.

- (தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவை எண்ணல் வேண்டும். – பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வரவேற்பால் நெகிழ்ந்து போகும் துர்ப்பாக்கியம்

எங்கள் தமிழர் தாயகம் இலங்கைக்குள் இருந்தாலும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அரச தரப்பினர் வருகை தரும்போது அவர்கள் அதனை ஒரு வெளிநாட்டுப் பயணமாக நினைக்கும் அளவுக்கு நிலைமை உள்ளது.

ஆம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர் பிரதானிகள் யார் இங்கு வருகை தந்தாலும் அவர்களை மங்கள வாத்தியம் சகிதம் வரவேற்று மாலை அணிவித்து, ஆராத்தி எடுத்து அவர்களை ஒரு வித்தியாசமான – நெகிழ்ந்த மனநிலைக்கு ஆளாக்கிவிடுகிறோம்.

இதன் காரணமாக நிர்வாக ரீதியாகப் பேச வேண்டிய விடயங்களை மேற்குறித்த அரச பிரதானிகள் பேசாமல் விடுகின்ற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுகிறது.

உண்மை. அரச தரப்பினர் தமிழர் பகுதிகளுக்கு வருகை தருகின்றபோது, அவர்களின் வருகை இயல்பானதாக இருக்க வேண்டும்.

அப்போதுதான் நிர்வாகம் சார்ந்து இறுக்கமான முடிவுகளை எடுக்க முடியும்.

மாறாக, எங்கள் தமிழர் பகுதிகளில் இருக்கக்கூடிய பிரச்சினைகளைப் பேச வருகின்ற அரச தரப்புக்கு நாம் ஆலாவர்ணம் செய்ய, அவர்கள் அதில் இலயித்து எந்தப் பிரச்சினையையும் குறைபாட்டையும் பேசாமல் நயத்தக்க நாகரிகம் பேணுகின்றனர்.

இதன் காரணமாக அரச பணியின் பொருட்டு வருகின்ற மந்திரி பிரதானிகளை வாலாஜப்படுத்துகின்ற காரியங்களில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் தீவிரம் காட்டுகின்றன.

அதன் பின்னணியிலேயே மங்கள வாத்தியம், மாலை மரியாதை, ஆராத்தி என்ற படோபகாரம் தொடர்ந்தும் நடந்தாகின்றன.

உண்மையில் இவை எங்கள் நிர்வாகத்தைக் கடுமையாகப் பாதிக்கச் செய்கின்ற விடயங்களாகும்.

அதேநேரம் தென்பகுதியில் இவ்வாறான படோபகாரங்கள் அரச தரப்பினருக்கு இடம் பெறுவதில்லை. அதன் காரணமாக அங்கு ஒரு சிறந்த முகாமைத்துவ சிந்தனையோடு கூடிய கலந்துரையாடல்கள் சாத்தியமாகின்றன.

அத்தகு கலந்துரையாடல்கள் அங்கு மிகச்சிறந்த விளைவுகளைக் கொடுத்துள்ளதையும் காண முடிகிறது.

எனவே அரச பிரதானிகள் எங்ஙனம் தென்பகுதியில் நிர்வாகம் சார்ந்த விஜயங்களை மேற்கொள்கிறார்களோ அதுபோல, தமிழர் பிரதேசங்களிலும் வரவேற்புக் கலாசாரங்களைத் தவிர்த்து சலசலப்பற்ற மனநிலையில் நிர்வாக விடயங்கள் குறித்த கலந்துரையாடல்களைச் செய்ய வேண்டும்.

அதுவே இலக்கை அடைவதற்கான உபாயமாகும்.

# இலங்கையின் பொருளாதார மீட்சி
# எதிர்பார்த்ததை விட அதிகம்
## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார மீட்சி ஆரம்பத்தில் எதிர்பார்த்ததை விட தற்போது வேகமாக முன்னேறி வருவதாக இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் பொருளாதார மீட்சி ஆரம்பத்தில் நாம் எதிர்பார்த்ததை விடவும் தற்போது வேகமாக முன்னேறி வருகின்றது.

ஒரு நாடு நெருக்கடியால் பாதிக்கப்பட்டவுடன் உற்பத்தி இழப்பை மீட்டெடுக்க நான்கு முதல் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

எங்கள் விடயத்தில் மூன்று ஆண்டுகளுக்குள் அந்த நிலையை அடைந்துள்ளோம். அடுத்த ஆண்டுக்குள் வேலைவாய்ப்பு, வறுமைக் குறைப்பு, வருமானம் மற்றும் வாழ்க்கைச் செலவு போன்ற முக்கிய துறைகளில் இலங்கை நெருக்கடிக்கு முந்தைய நிலைகளை விட சிறப்பாக இருக்கும்.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் வருமானம் அதிகமாக இருக்கும்.

அடுத்த மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில் நாம் முன்பு இருந்த நிலையை அடைய முடியும் இவ்வாறு நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## அஸ்வெசும பயனாளிகளுக்கான உதவித் தொகை இன்று வரவு வைக்கப்படும்

2025 ஒகஸ்ட் மாதத்திற்கான அஸ்வெசும பயனாளிகளின் உதவித்தொகை இன்று (15) அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

மொத்தம் 14 இலட்சத்து 21 ஆயிரத்து 745 பயனாளிக் குடும்பங்களின் கணக்குகளில் 11,275,973,750 ரூபாய் வரவு வைக்கப்படவுள்ளது.

அதன்படி பயனாளிகள் தங்களுக்குச் சேர வேண்டிய உதவித் தொகையை இன்று முதல் தங்களது அஸ்வெசும பயனாளி வங்கிக் கணக்குகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## 400 கொள்கலன் உப்பு துறைமுகத்தில் தேக்கம்
### விடுவிக்குமாறு கோரிக்கை

கொழும்புத் துறைமுகத்தில் 45 நாட்களாக தேங்கியுள்ள 400 கொள்கலன் உப்பை உடனடியாக விடுவிக்குமாறு இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம், அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சிறுபோகத்திற்குப் பிறகு உப்பு உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டமை மற்றும் 2024 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் ஏற்பட்ட பாதகமான வானிலை காரணமாக உப்பு உற்பத்தி இலங்கையில் பாதிக்கப்பட்டது.

இதன் விளைவாக இலங்கையால் உப்பு இருப்புக்களைப் பராமரிக்க முடியவில்லை.

இதனால் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் மெட்ரிக் தொன் உப்பு இறக்குமதிக்கு அரசாங்கம் அனுமதித்தது. அதன் பிரகாரமே நாமும் உப்பை இறக்குமதி செய்தோம். என்றாலும் இவற்றை விடுவிப்பதில் பாரிய தாமதங்கள் உள்ளன.

உடனடியாக இவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனவும் இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

## ரூ.40 மில்லியன் பெறுமதியான குஷ் போதைப்பொருள் மீட்பு
### ஒருவர் கைது

தாய்லாந்திலிருந்து சட்டவிரோதமான முறையில் குளிரூட்டியில் மறைத்து வைத்து நாட்டிற்கு கடத்திவரப்பட்ட சுமார் 40 மில்லியன் ரூபாய் பெறுமதியான குஷ் போதைப்பொருள் கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தினால் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது.

பேலியகொட, நுகே வீதியில் உள்ள துறைமுகக் கொள்கலனில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது 6 கிலோகிராமுக்கும் அதிக நிறையுடைய குஷ் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகக் கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் கமல் ஆரியவங்ச தெரிவித்துள்ளார்

இதேவேளை குஷ் போதைப்பொருள் கடத்தல் சம்பவம் தொடர்பாக வெல்லம்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## ராஜித சேனாரத்னவின் சொத்துக்கள் முடக்கத் திட்டம்

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தொடர்ந்து தலைமறைவாக இருந்தால் அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்வதில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்காக ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பாக நீதிமன்ற உத்தரவு பெறப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன இருந்த பல இடங்களில் அவரைக் கைது செய்ய சமீபத்திய நாட்களில் சோதனை நடத்தப்பட்டாலும் அவரைக் கைது செய்ய முடியவில்லை. ராஜித சேனாரத்னவைக் கைது செய்ய நீதிமன்றத்தால் சமீபத்தில் ஒரு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது.

முன்னதாக முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனைக் கைது செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது அவர் தொடர்ந்து தலைமறைவாக இருந்ததால் அவரது சொத்துக்களும் பறிமுதல் செய்யத் தயாரான போது அவர் நீதிமன்றத்தில் சரணடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வாவியிலிருந்து தோட்டாக்கள் மீட்பு

அனுராதபுரம் கலென் பிந்துனுவெவ கெடலாவ வாவியில் இருந்து தானியங்கி துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளதாகக் கலென் பிந்துனுவெவப் பொலிஸார் தெரிவித்தனர்.

பல தோட்டாக்கள் இருப்பதை அவதானித்த விவசாயி ஒருவர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். அதற்கமைய உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் குறித்த வாவிக்குச் சென்று மேற்கொண்ட தேடுதலில் 5,038 தோட்டாக்களை மீட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 38

**சொக்கன்**

நல்ல யோசனை தான் ஆனால் பிரான்ஸுக்கு அப்போது எக்ஸ்ட்ரா போர்ப் படகுகள் தேவைப்படவில்லை. சாரி சொல்லிக் கதவைச் சாத்தி விட்டார்கள்.

ஃபெலிக்ஸ் அமியாட் நொந்துபோனார். இப்போது இந்த ஐந்து போர்ப் படகுகளையும் அவர் இஸ்ரேலுக்கும் தரமுடியாது. வேறு யாருக்கும் விற்கமுடியாது. என்ன செய்வது என்றே புரியாமல் முழி பிதுங்கிக் கொண்டிருந்தார்.

கிட்டத்தட்ட இதேநேரம் அங்கே இஸ்ரேலில் ஒரு இரகசியக் கூட்டம் செர்பார்க் துறைமுகத்தில் இருக்கிற நம்ம போர்ப் படகுகளை எப்படி இங்கே கொண்டு வருவது?

அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை என்றது இஸ்ரேல் கடற்படை. ஃபிரெஞ்சுக்காரர்கள் எதிர்பார்க்காத நேரத்தில் அவர்களைச் சுத்தி வளைச்சுத் தாக்கினால் ஐந்து என்ன ஐம்பது படகுகளைக்கூடச் சுலபமாக அள்ளிக் கொண்டு வந்துவிடலாம்.

இதெல்லாம் கேட்பதற்கு நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் எதார்த்தத்தில் சரிப்படுமா? என்றார் மொசாட் தலைவர் ஜ்வி ஜமீர். செர்பார்க் துறைமுகத்தில் என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளாமல் நாம் இதில் இறங்குவது நல்லதில்லை.

மொசாட் இப்படிச் சொன்னதும் கடற்படைக்குக் கடுப்பு. இப்ப என்னதான் செய்யணும் என்கிறீர்கள். முதலில் நாங்கள் எங்க உளவாளிகளை செர்பார்க் அனுப்பி வைக்கிறோம். அவர்கள் துறைமுகத்தை நோட்டம் விட்டு ரிப்போர்ட் அனுப்பட்டும் அதை வைத்து அடுத்து என்ன செய்யலாம் என்று முடிவு செய்வோம்.

உடனடியாக மொசாட் ஏஜென்ட்கள் சிலர் செர்பார்க் புறப்பட்டார்கள். துறைமுகத்தை வேடிக்கை பார்ப்பது போல அதன் தினசரி நடவடிக்கைகள் எங்கே யார் இருக்கிறார்கள் இஸ்ரேல் போர்ப் படகுகள் எந்த இடத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் என ஒவ்வொன்றையும் கவனித்துக் குறிப்பு எடுத்தார்கள். எல்லாத் தகவல்களையும் மேலிடத்துக்கு அனுப்பிவைத்தார்கள்.



இந்த அறிக்கையைப் பார்த்ததும் இஸ்ரேலியக்கடற்படை குஷியாகிவிட்டது நாம் முதலிலே சொன்னோமே செர்பார்க் துறைமுகத்தில் செக்யூரிட்டி போதாது நாம் இப்போது கிளம்பினாலும் அடிச்சுத் தூள் பண்ணிடலாம்.

ஜ்வி ஜமீர் மறுபடியும் தயங்கினார். அவசரப்படாதீங்க கொஞ்சம் நிதானமாக யோசிப்போம் என்றார்.

மற்ற ஃபிரெஞ்சுத் துறைமுகங்களோடு ஒப்பிடும்போது செர்பார்க்கில் பாதுகாப்பு குறைவுதான் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் இஸ்ரேலியக் கடற்படை அதிரடியாக உள்ளே புகுந்தால் ஐந்து போர்ப் படகுகளையும் வளைத்து வெளியே கொண்டு வருவது சுலபம். ஆனால் அதன் பிறகு? அங்கேதான் பிரச்சினை ஆரம்பிக்கிறது!

செர்பார்கில் கடத்தப்படுகிற ஐந்து படகுகளும் கடலில் பல நூறு மைல்களைக் கடந்து தான் இஸ்ரேலுக்குள் நுழையவேண்டும். அதுவரை பிரெஞ் அரசாங்கம் சும்மா இருக்குமா? விமானங்கள் போர்க்கப்பல்களை அனுப்பிச் சுற்றிவளைத்துவிடமாட்டார்களா?

இந்த விடயத்தில் வேகத்தைவிட விவேகம்தான் முக்கியம் என்று நினைத்தார் ஜ்வி ஜமீர். நாம ஃபிரான்ஸைத் தாக்கி அவர்களுடைய ஆத்திரத்தைக் கிளறவேணாம் அதற்குப்பதிலாக ஒரு இரகசியத்திட்டம் போடுவோம் அவர்களை ஏமாற்றி அந்த ஐந்து போர்ப்படகுகளையும் திருடிக் கொண்டு வந்து விடுவோம்.

அப்போது தான் அவர்கள் கோபப் படமாட்டார்கள். அட்டா இப்படி ஏமாந்துட்டோமே என்று அவமானப்படுவார்கள். அது தான் நமக்கு வசதி.

ஜ்வி ஜமீரின் இந்த யோசனை எல்லோருக்கும் பிடித்திருந்தது. இதற்காக ஒரு விசேட மொசாட் படை அமைக்கப்பட்டது. ஃபிரெஞ்சுகாரர்களுக்குச் சந்தேகம் வராதபடி அந்த ஐந்து படகுகளையும் எப்படி அபேஸ் செய்வது என்று கவனமாகத் திட்டம் தயாரிக்க ஆரம்பித்தார்கள்.

சில வாரங்கள் கழித்து நோர்வே நாட்டைச் சேர்ந்த மாட்டின் சியெம் என்பவர் ஃபிரான்ஸுக்கு வந்தார் CMN நிறுவனத்தின் தலைவர் ஃபெலிக்ஸ் அமியாடைச் சந்தித்துப் பேசினார். நீங்க ஏதோ ஐந்து படகுகளை சும்மா நிறுத்தி வைத்திருக்கிறீர்களாமே நிஜமாவா?

ஃபெலிக்ஸ் அமியாட் சட்டென்று உஷாராகிவிட்டார். நீங்கள் யாரு? ஏன் அந்த ஐந்து படகுகளைப்பற்றி விசாரிக்கிறீர்கள்.

மார்டின் சியெம் நிதானமாகத் தன்னுடைய பிஸினஸ் பின்னணியை விளக்கிச் சொன்னார். எங்கள் கம்பெனிக்கு அந்தப் படகுகள் தேவைப் படுகிறது. உங்களுக்கு ஓகே என்றால் உடனே பத்து மில்லியன் டொலர் ஹாட் கேஷாக் கொடுத்து வாங்கிக் கொள்கின்றோம்!

அவ்வளவுதான் ஃபெலிக்ஸ் அமியாட் தலைகுப்புற விழுந்துவிட்டார். பைசா பிரயோஜனம் இல்லாமல் மூலையில் நிறுத்தி வைத்திருக்கும் படகுகளுக்குப் பத்து மில்லியன் டொலர் தருகிறேன் என்று ஒருத்தன் வந்திருக்கிறான் கடவுளே உனக்கு நன்றி!

ஆனால் அப்போதும் ஒரே ஒரு பிரச்சினை மிச்சமிருந்தது. இந்தப் படகுகள் ஐந்தும் இஸ்ரேலுக்காகத் தயாரிக்கப்பட்டவை. என்னதான் ஃபிரெஞ்சு அரசாங்கம் அதை வெளியே அனுப்புவதற்குத் தடை விதித்திருந்தாலும் இஸ்ரேலின் அனுமதி இல்லாமல் இந்தப் படகுகளை யாருக்கும் விற்கமுடியாது.

நோ ப்ராப்ளம் என்றார் மார்ட்டின் சியெம். உங்களுக்கு இஸ்ரேலினுடைய அனுமதி தானே வேணும்? நான் வாங்கித் தர்றேன்.

அப்போதாவது ஃபெலிக்ஸுக்குச் சந்தேகம் வந்திருக்க வேண்டும். பத்து மில்லியன் டொலர் காசு அவருடைய கண்களை மறைத்துவிட்டது. மார்ட்டினுக்கு ஐந்து படகுகளையும் விற்பதற்கு ஒப்புக்கொண்டுவிட்டார். உடனடியாக மார்ட்டின் சியெம் மொசாட்டுக்குத் தகவல் அனுப்பினார். பட்சி மாட்டியது.

அடுத்த சில நாட்களில் ஏகப்பட்ட இஸ்ரேல் மாலுமிகள் கப்பல் ஊழியர்கள் செர்பார்க் வந்து சேர்ந்தார்கள். துறைமுகத்தின் ஒரு மூலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஐந்து போர்ப் படகுகளைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டார்கள்.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப்...

பிட்டுள்ளார்.

இலங்கையின் 37ஆவது பொலிஸ் மா அதிபராக பிரியந்த வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று அவரின் கடமையேற்பு நிகழ்வுகள் பொலிஸ் தலைமையகத்தில் இடம் பெற்றிருந்தன.

இதன்போது உரையாற்றிய அவர், "குற்றம் மற்றும் போதைப்பொருள் வலையமைப்புகளைத் தடுப்பதற்கான சிறப்பு நடவடிக்கைகள் தற்போதுள்ள சட்டங்களின் கீழ் திறம்படத் தொடர முடியாது என்று ஜனாதிபதி, நீதி அமைச்சர் மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது".

மேலும், "இந்த இடைவெளிகளை நிவர்த்தி செய்யப் புதிய சட்ட வரைவு உருவாக்கப்பட்டு வருகின்றது. குற்றவியல் மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடும் நபர்களைக் கையாள்வதற்கான சட்டங்களை நாங்கள் உருவாக்கி வருகிறோம்.

முப்படைகளின் ஆயுதங்கள், முன்னாள் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள், திருடப்பட்ட துப்பாக்கிகள் தற்போது சட்டவிரோதச் செயல்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அவை குறித்து விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அதேவேளை குற்றவியல் அல்லது போதைப் பொருள் தொடர்பான நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாகக் கண்டறியப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது கடுமையான ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். குற்றம் நிரூபிக்கப்பட்ட அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்படுவார்கள்" எனச் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## மட்டக்களப்பு...

தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுணதீவு - தாண்டியடி மாவீரர் துயிலுமில்லக் காணியில் விசேட அதிரடிப்படை முகாம் அமைந்திருக்கிறது என்றும், அந்தக் காணியினை விடுவித்து மக்கள், அஞ்சலி செலுத்துவதற்கு ஏற்றவகையில் மாற்றியமைத்து வழங்குமாறும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கோரியிருந்தார்.

எனினும் அந்த காணியினுள் நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு துயிலுமில்லம் இருந்ததற்கான அடையாளங்கள் இல்லையென்றும், விசேட அதிரடிப்படை முகாமின் அதிகாரி ஒருவர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

இதற்குப் பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், முழுமையாக இல்லாவிட்டாலும் குறித்த காணியில் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதற்கு ஒருபகுதியினை விடுவிக்குமாறு கோரியுள்ளார்.

இதன்படி நேரடியாக கள விஜயம் மேற்கொண்டு காணியின் ஒருபகுதியினை விடுவிப்பதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இதன்போது தெரிவித்தார். (ம-7)

## காங்கேசன்...

ஆறுகாட்டுத்துறை கடற்கரையைச் சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இருவரும், வேதாரண்யம் கடலோரப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டவர்களா? அல்லது கடத்தலுடன் தொடர்புடையவர்களா? எனப் பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம-7,60)

## செம்மணி...

ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மன்றில் முன்னிலையான சுமந்திரன் குறித்த விடயத்தை தெரிவித்தார்.

மேலும், புதைகுழி அகழ்வுப் பணிகளில் சர்வதேச நிபுணத்துவ உதவிகளைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். மரபணு சோதனைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தார்.

தற்போது அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் வேளைகளில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், பாதிக்கப்பட்ட தரப்பினர், மயான அபிவிருத்திச் சபையினர் உள்ளிட்ட தரப்புகளிடம் வாக்குமூலங்களை பெற்று வருவது அச்சுறுத்தும் செயற்பாடாகும்.

எனவே குற்றப்புலனாய்வுப்பிரிவினர் அவ்வாறான செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தார்.

செம்மணியில் மாணவி கிருஷாந்தி படுகொலை வழக்கின் மரண தண்டனைக் கைதியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் இராணுவ அதிகாரிகள் சிலர் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றில் உள்ளது. அந்த வழக்கினை யாழ். நீதவான் நீதிமன்றுக்கு மாற்றி, தற்போது நடைபெறும் செம்மணி புதைகுழி வழக்குடன் சேர்த்து விசாரிக்கப்பட வேண்டும்.

அந்த வழக்கில் கைதாகி பிணையில்உள்ள இராணுவ அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லக் கூடிய ஏது நிலை காணப்படுவதால், அந்த வழக்கு, செம்மணிப் புதைகுழி வழக்குடன் இணைக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் மன்றில் கோரிக்கை வைத்தார்.

இது தொடர்பில் மன்றில் எழுத்துமூல சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு மன்று அவருக்கு கட்டளையிட்டுள்ளது. (ம-7,33)

## அதி...

முக அத்தியட்சகர் த.பகீரதன் தெரிவித்துள்ளார்.

10 தளங்களைக் கொண்ட மிகவும் பிரமாண்டமான இந்தக் கப்பலானது இந்தியாவிலிருந்து சுமார் 1,391 சுற்றுலாப்பயணிகளுடன் புறப்பட்டு அம்பாந்தோட்டை, திருகோணமலை ஊடாக இன்று காங்கேசன் துறையை வந்தடையவுள்ளது. இந்தக் கப்பலில் சுமார் 584 சிப்பந்திகள் (ஊழியர்கள்) பணிபுரிகின்றனர்.

குறித்த சுற்றுலாப் பயணிகள் கப்பலானது கடந்த 2023ஆம் ஆண்டு 9 தடவைகளும் 2024ஆம் ஆண்டு 6 தடவைகளும் இலங்கைக்கு வந்திருந்தது. இவ்வாறிருக்க இந்த ஆண்டு இன்று (15) மற்றும் 22ஆம் திகதி ஆகிய இரண்டு தினங்கள் வருகை தரவுள்ளதாக த.பகீரதன் மேலும் தெரிவித்தார். (ம-7,104)

## எதிர்வரும் 22...

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகும் என யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ம-7,33)

மஹஜன சம்பத
திகதி 2025.08.14
சீட்டிழுப்பு இலக்கம் 5921
T 9 9 8 4 4 7
அத சம்பத T 8 4 4 7
சீட்டிழுப்பு இலக்கம் 496
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.08.14
சீட்டிழுப்பு இலக்கம் 0037
மகரம் 05 12 17 51

தன நிதானய
திகதி - 2025.08.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1951
P 20 25 63 73 P
Double Chance 27404

மெகா பவர்
திகதி 14/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2269
U 24 10 12 23 77

ஜய
திகதி 2025.08.14
சீட்டிழுப்பு இலக்கம் 0189
Y 0 3 3 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4163
சீட்டிழுப்பு திகதி | 14.08.2025
V 03 31 40 62
V
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.14
சீட்டிழுப்பு இலக்கம் 1230
சிம்மம் 09 18 25 61 சிம்மம்
01176

உத்தியோகபூர்வ முடிவுகள்
14.08.2025 வெற்றி வாரம் 0629
V 9 7 7 7 9 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,981,577.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2895
சீட்டிழுப்பு திகதி 2025.08.14 தினம் வியாழக்கிழமை
26 39 43 79 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,891,002.40

சனிதா
திகதி 14.08.2025 வெற்றி வாரம் 5056
24 53 55 58 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,224,624.40

சசிரி
சீட்டிழுப்பு 747
சீட்டிழுப்பு திகதி 14.08.2025
வியாழக்கிழமை
29 44 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

லக்ன
சீட்டிழுப்பு வாரம் 4607
சீட்டிழுப்பு திகதி 14.08.2025 தினம் வியாழக்கிழமை
08 18 50 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,894,816.00

கப்ருக
V 04 20 59 67 69
2071
14.08.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.587,837,340.80

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் 2721
சீட்டிழுப்பு திகதி 2025.08.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,964,504.80
08 09 32 49 S

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி தவரட்ணம் பிலோமினா (றோஸ்)



மண்ணில் 12.09.1942 | விண்ணில் 12.08.2025

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தவரட்ணம் பிலோமினா (றோஸ் ) அவர்கள் கடந்த (12.08.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா தவரட்ணம் (வடமாகாண கடற்தொழில் அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - றோசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு சின்னையா- நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும் திருமாறன், றதிமதி, மதிமாறன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் அலோசியஸ் அலெக்சாண்டர், அல்வீனம்மா (ராணி), சகாயமேரி (பபி ) ஆகியோரின் சிறிய தாயாரும், அனோமா, அன்ரனி (கனியூட்), மகிழ்நங்கை ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

காலஞ்சென்றவர்களான அலோசியஸ் திரேசம்மா (லில்லி), அந்தோனிப்பிள்ளை சேவியர், சின்னராசா (லக்ஸ்மாலா), ஜோசப் (புஸ்பராசா) மற்றும் ஜேம்ஸ் (சின்னத்துரை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான அலோசியஸ் (பொன்னுத்துரை), நவமணி மற்றும் நாகம்மா, அன்னமலர், வரதராணி, காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், அழகரத்தினம், ஜெயராணி மற்றும் சிவஞானரத்தினம், ஜெயரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னார் யுனிஸ்ரன், ஹேமந்த, பிரசாதினி, பிராங்கோ, திருநயனி, மறவன் மற்றும் எமா ஆகியோரின் அன்புநிறை பேர்த்தியும் நோவா, ஆதன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.08.2025) சனிக்கிழமை அன்று பிற்பகல் 03.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மரியன்னை (கொஞ்சேஞ்சி மாதா) சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

83/11, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(C-3652)

தகவல்:
குடும்பத்தினர்


## கணக்கீடு

| | |
|---|---|
| A/L 2025 மேந்தலை | நாளை 8 am |
| A/L 2027 மூல ஏடுகள் | நாளை 10 am |
| A/L 2026 கம்பனி | நாளை 11 am |

S.தவா
தொடர்ந்து யா.மா.நிலை 01 க்கு உரித்துடைய ஆசிரியர்
(5050)
DCM யாழ் நகர்
077 239 5858


## பெண்ணொருவர் சடலமாக மீட்பு

மருதானை - டெக்னிக்கல் சந்தியில் உள்ள மூன்று மாடிக் கட்டடத்தில் இருந்து 45 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலம் மீட்கப் பட்டுள்ளது.

குறித்த யுவதி கொலை செய்யப் பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் நிலவும் நிலையில்சம்பவம்தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)


## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி நல்லூர் கோவிலுக்கு 1.2km தூரத்திலும் பலாலி வீதியில் இருந்து 500m தூரத்திலும் 22 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

(1439)

076 091 8505

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3651)

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-3651)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு, கொடிகாமம், திருகோணமலை, புத்தூர், கிளிநொச்சி, சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237


## விற்பனைக்கு

குதிரை போட் 25 H.P Susiki
32 Pcs சூடை வலை முற்றிலும் புதியவை (தயார் நிலையில்)
சிறு கழிவுடன் விற்பனைக்கு
(C-3611)
077 357 3055
வல்வெட்டித்துறை

## வேலையாட்கள் தேவை

வவுனியாவில் இயங்கி வரும் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.
(1440)
076 889 1308
077 839 3974


# மரண அறிவித்தல்



தோற்றம் 15.04.1954 | மறைவு 14.08.2025

## ஆறுமுகம் சின்னராசா

(உரிமையாளர் – 750 இல பாதை தனியார் பஸ் சேவை சங்கம் வடமராட்சி 29– 8604, 61– 5855 குமிக், அமல், அக்ஷ்ஷயா, பாடசாலை சேவை – பருத்தித்துறை)

கோவிற்சந்தை, கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சின்னராசா அவர்கள் நேற்று (14.08.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் பவித்தா, ராகுலன் (கனடா), அமலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானரூபன் (நீதிமன்ற கட்டுநர் - கிளிநொச்சி), வித்யா (முகாமைத்துவ உதவியாளர் யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் திலக்ஷன் (ஹாட்லிக்கல்லூரி), அக்ஷ்ஷயா (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), வர்ஷன் (ஹாட்லிக்கல்லூரி), சவிந் (காசிநாதர் வித்தியாலயம்), சாகித் ஆகியோரின் அன்புப் பேரனும் விரகத்தி, அமரர் வேலும் மயிலும் மற்றும் கிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, கந்தப்பு, நடராசா மற்றும் தங்கபாக்கியம், தவமணி தேவி, காலஞ்சென்ற மனோரஞ்சிதம் மற்றும் ஆறுமுகநாதன், மனோன்மலர், கலைவாணி ஆகியோரின் சகோதரனும் சிவநாதன், சிவசோதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2025) வெள்ளிக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கோவிற்சந்தை,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(1441)

தகவல்:
குடும்பத்தினர்
077 936 1356

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.